Free Circulation Germany- England
மணி: 71 - ஓசை: 299 ஆவணி. August. 2021

# வெற்றிமணி
Vettimaniy
ESTD 1950

27TH years IN EUROPE Successful Publishing

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன். B.F.A

Orientalisch
Textilien & Schmuck
31 ஆவது ஆண்டு நிறைவு
என்றும் எம்முடன் தொடர்பில் இருங்கள்
Königswall 16 (Am Hbf) 44137 Dortmund
Tel:0231 162377

# ஈழத் தமிழர் விவகாரத்தை மேற்கு நாடுகள் கைவிட்டுவிடும் ஆபத்து?

அரசியல் களம் → கொழும்பிலிருந்து ஆர்.பாரதி

ஐந்து நொடி ஒழுக்கம்



அம்மாவின் கவிதைகள்

Dr.IN





ஆரபி கணக்கில் புலி



# அதுவும் ஜீவகாருண்யமே!

தினமும் காலையோ மாலையோ சூரியன் அழைத்தால் உடன் புறப்பட்டு செல்ல ஒரு ஆற்றங்கரை. எனது இல்லத்திற்கு மிக அருகில் உள்ளது.

ஆறு என்றதும் தாயகத்தில் மலை உச்சியில் இருந்து வீழ்ந்து பல பாறைகளை மோதி எந்த வித வலியோ சலிப்போ இல்லாமல் ஆடிப் பாடிப் பாயும் ஆறுபோல் இது எனக் கற்பனை செய்யவேண்டாம்.

இது செயற்கை ஆறு. பல நூறு வருடங்களுக்கு முன் வெட்டப்பட்டது. ஒரு கப்பல் ஒன்றை ஒன்று விலக்கும் அளவுக்கான அகலம் மட்டுமே. அருகே இரு புறமும் நடை பாதையும் சைக்கிள் பாதையும் உண்டு.

இப்பாதையில் நில்லாமல் ஓடுபவர்கள் அதிகம். அப்படி அவர்கள் நின்றால் அவர்களது நாய் காலைத் தூக்குது என்று அர்த்தம்.

ஆற்றில் அனுமதி பெற்றவர்கள் மட்டும் மீன்பிடிப்பார்கள். பறவைகள் பல நீரிலும் இறங்கும் விமானம் போல் அடிக்கடி இறங்குவதும் ஏறுவதுமாக இருந்தன. இருந்தாலும் வாத்துக்கூட்டமே அங்கு அதிகம்.

ஓடுபவர்களைத் தவிர என்னைப் போல் அமைதியாக நடப்பவர்கள் சிலரும் இருக்கிறார்கள்.

அவர் நடக்கும் போது ஆற்றில் உள்ள தாராக்களுக்கு உணவு கொடுத்தும் மகிழ்வார்கள்.

சிலரைத் தினமும் சந்திப்பதால் ஏதோ ஒரு உறவு நமக்குள் உருவாகும். முன்பெல்லாம் அதனைக் காதல் என்றுதான் எண்ணுவோம். ஆனால் இப்போ காதலுக்கும் அப்பாலும் அழகான பல உறவுகள் தெரிகின்றது. பலரைத் தினமும் காண்பதால் அவர்கள் புன்சிரிப்போடு நடந்தனர். சிலர் நின்று கதைக்கவும் செய்தனர்.



● மாதவி (யேர்மனி)

உங்கள் பிள்ளைகள் எங்கு வேலை செய்கிறார்கள்.

சொந்த வீட்டில் இருக்கிறீங்களா? தனி வீடா அப்பாட்மென்ரா?

கார் என்ன வைத்திருக்கிறீங்கள். நீங்கள் இந்த நாட்டு சிற்றிசனா?

இப்படியான எங்கள் வளமையான பல கேள்விகளில், எந்தக் கேள்வியும் இருக்காது.

யாவும் இயற்கையை ஒட்டியே இருக்கும்.

சரி இப்போ கதைக்கு வருகிறேன்.

ஒருவர் ஆற்றங்கரையில் தாராக்களுக்கு உணவு போட்டுக்கொண்டு இருந்தார்.

என்னைக் கண்டதும் புன் சிரிப்புடன் தாராக்களின் மகிழ்ச்சியைப் பார்த்தீர்களா? தினமும் நான் மீன் பிடித்து வீடு திரும்பும் போது இதனைச் செய்வேன் என்றார்.

உண்மையில் தாராக்கள் நன்றி சொல்வது அதன் சத்தத்தில் தெரியும். எந்த மொழிக்காரருக்கும் புரியும்.

கூட்டமாக ஓடிவந்து உண்ணும் அழகே தனி.

இப்படி ஆர்வமாக உண்கிறதே என்ன உணவு கொடுக்கிறீர்கள் எனக் கேட்டேன்.

உடன் சொன்ன அவர் பதில் என்னை..!

பதில் இதுதான்:

மீன் பிடிக்க தூண்டிலில் செருகிய உயிர் புழுக்களை, மீன்பிடித்த பின் வீணாக்காமல், தாராக்கு போடுகிறேன் என்றார்.

நான் சட்டென்று சொன்னேன், ஏன் வீண் என்று நினைப்பான், அந்தப் புழுக்களை மீண்டும் மண்ணில் போட்டு வாழ விடுங்களேன்! அதுவும் ஜீவகாருண்யம் தானே என்றேன்.

என்னை யார் என்று தெரியாது! என்ன இனம்!! என்ன மதம்!!! எதும் அறியார்.

பட்டென்று மண்ணைக் கிளறி புழுக்களை போட்டுவிட்டு புன்னகைத்தார்.

இப்படியான புன்னகை மனிதரின் முகத்தில் மிக அரிதாகவே பூக்கின்றது. இதுவும் ஜீவகாருண்யமே!

பக்கத்தில் காத்திருந்த ஒரு பெண் அந்த தாராக்களுக்கு கொடுக்க கைநிறைய தானியங்களுடன் காத்து நின்றாள். ■

# 15 மாதங்களுக்குள் இலங்கையின் கடன் 3,022 பில்லியன் ரூபா

## ஒரு குடும்பத்தின் கடன் சுமை 6,04,440 ரூபாவாக அதிகரிப்பு

**அரசாங்கம்** ஆட்சிக்கு வந்து முதல் 15 மாதங்களுக்குள் நாட்டின் கடன் தொகை 3,022 பில்லியன் ரூபா அதிகரித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதனால் ஒரு குடும்பத்தின் கடன் சுமை 6,04,440 ரூபாவாக அதிகரித்துள்ளது. நாடு கடன் பட்டால் அது ஒவ்வொரு குடிமகனின் கடனும் ஆகும்.

நல்லாட்சி அரசாங்கத்தின் 5 வருட ஆட்சி காலம் முழுவதும் நாட்டின் மொத்த கடன் 5,545 பில்லியன் ரூபாவாகவே அதிகரித்திருந்தது.

மார்ச் 31 ஆம் திகதிவரை நாட்டின் மொத்த கடன் தொகை 16,053 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. அமைச்சர் பசில் ராஜபக்ச நிதி ஆலோசகராக பணியாற்றிய 15 மாதங்களில் கடன் தொகை அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

நன்றி: தினக்குரல்







வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
ஓசை : 299



ஆரம்பம்: 1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A
Chief Edito:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333
e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276




# ஈழத் தமிழர் விவகாரத்தை மேற்கு நாடுகள் கைவிட்டுவிடும் ஆபத்து?

கொழும்பிலிருந்து
ஆர்.பாரதி

**திருமலையில் கால் பதிக்கப் போகின்றதா அமெரிக்கா?** திருமலை துறைமுகத்தையும், அதனையடுத்துள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த சில பகுதிகளையும் நீண்டகால குத்தகை அடிப்படையில் அமெரிக்காவுக்குக் கொடுக்கப்படவிருப்பதாக செய்தி ஒன்று வெளிவந்திருக் கின்றது. தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் என்ற சிங்களத் தேசியவாத அமைப்பினர்தான் இந்தச் செய்தியை வெளியிட்டு கொழும்பு அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். உத்தியோகபூர்வமாக இது தொடர்பில் செய்திகள் எதுவும் வெளிவரவில்லை. ஆனால், இது போன்ற செய்திகள் இவ்வாறு கசியவிடப்படுவது வழமையானதுதான். திருமலை துறைமுகத்தின் மீது அமெரிக்காவுக்குள்ள அக்கறை இரகசியமானதல்ல. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கேந்திர முக்கியத்துவம்வாய்ந்த இடத்தில் இருக்கும் திருமலை துறைமுகத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட வேண்டும்

12 ஆம் பக்கம் பார்க்க...



கே.எஸ்.சுதாகர்
(மெல்போன்– அவுஸ்திரேலியா)

## சம்பவம் 12

# காளியாட்டம்



இன்று இரவு விசேட பூசை. உங்கள் கணவன்மாரையும் கூட்டிக்கொண்டு குடும்பமாக வாருங்கள். வீடு வீடாகக் கதவைத்தட்டி சொல்லிக்கொண்டு வந்தாள் கனகா. அவள், ஒன்பது யுனிட்டுகள் கொண்ட அந்தக் குடிமனையில் புதிதாக வந்தவள். ஏற்கனவே ஏழு தமிழ்க்குடும்பங்கள் அங்கு இருந்தன. இருந்த வெள்ளைக்காரக் குடும்பங்களில், ஒரு குடும்பம் காலி செய்யவே, கனகாவும் பாலாவும் அந்த வீட்டிற்கு வந்தார்கள்.

ஏற்கனவே இருந்தவர்கள் படித்துப் பட்டம் பெற்றவர்கள். பாலா ஒரு மெக்கானிக். அவனையும் மனைவியையும் ஒருவரும் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. உதயத்திற்கு முன்னர் வேலைக்குப் புறப்பட்டு, இருள் கவிந்தபின்னர் வீட்டுக்கு வருவான் பாலா. சனிக்கிழமையிலும் போய்விடுவான். கனகாவுக்கு வீட்டில் இருக்கப் போரடிக்கும். ஒவ்வொரு வீடாகத் தரிசனம் கொடுப்பாள். வீட்டில் இருப்பவர்களும் சிலவேளைகளில் கதைப்பார்கள்; பலவேளைகளில் ஏறெடுத்தும் பார்க்கமாட்டார்கள்.

கனகா, வெள்ளி இரவுகளில் வீட்டில் பூஜை செய்து வந்தாள். அதற்கு எல்லாரையும் வரும்படி சொல்வாள். பெண்களும் சின்னஞ்சிறுசுகளும் வருவார்கள். ஆண்கள் ஒருவரும் வருவதில்லை. அவர்களுக்கு வேலைக் களைப்பு. ‘வீட்டிலே பூஜை செய்தால் போச்சுது!’ என்பது அவர்கள் கருத்து. கனகாவிற்கு தங்களைப் புறக்கணிக்கின்றார்கள் என்ற தவிப்பு. அதற்காக அவள் செய்த உபாயந்தான் இநத ஹவிசேட பூசை’.

‘சுவாமியின் கோபத்துக்கு ஆளாகப் போகின்றீர்கள்’ என மனைவிமார் துருப்பைப் போட, ஒவ்வொருவராக வரத் தொடங்கினார்கள். பூசை ஆரம்பமானது. பாலா மணி கிலுக்க, கனகா தனது சமஸ்கிருத மந்திரங்களை எடுத்துவிட்டாள். வந்திருக்கும் எல்லோரையும் முழுசிப் பார்ப்பதும், பின்னர் சுவாமியை தொடர்பாடல் கொள்வதாகவும் இருந்தாள். பூக்களைத் தூவினாள், தீபம் காட்டினாள். ‘கணவைப் பார்த்து டுர்.. டுர்..’ எனக் கார் கிழம்பும் ஓசையாகச் சத்தமிட்டாள். கனகாவுக்கு உரு வரப்போகின்றது என்பதை உணர்ந்த பாலா, தங்குதடையின்றித் தேவாரங்கள் வர பாடத் தொடங்கினான். தலையை முன்னும் பின்னும் பக்கவாட்டிலும் வேகவேகமாக ஆட்டி, பிசுக்கான தலைமயிரை விளாசி எறிந்தாள் கனகா.

‘‘டேய்...’’ அது கடவுளின் வார்த்தை. வந்தவர்கள் ஆளை ஆள் பார்த்தார்கள். விழிகள் பயக்குறியுடன் பக்தி வெறி கொண்ட பெண்சிங்கத்தைப் பார்க்கின்றன. ‘‘பூசைக்கு வராமல் ஒழிப்பியளேடா?’’

திரும்பத்திரும்ப அதையே கேட்டபடி மூர்ச்சையாகிவிட்டாள் கனகா. பாலா எல்லோருக்கும் பிரசாதம் குடுத்துவிட்டு, கனகாவுக்கு நீர் தெளிக்க, சொல்லி வைத்தால் போல் அவள் எழும்பினாள். எல்லோரையும் சுழட்டுப் பார்வை பார்த்துவிட்டு, சுவாமிக்கான படையலை எடுத்தாள். சுவாமியின் கோபம் இன்னும் தீரவில்லை. படையலைக் குழைத்து உருண்டை ஆக்கினாள். உருண்டையைக் கையில் தூக்கி, எறிந்து விளையாடினாள். விரல்களினிடையே சாறு வழிந்து பாத்திரத்தினுள் ஒழுகியது. அப்படியே தூக்கி ஒரு எறி. வாயிற்குள் விழுந்தது போக, மீதி பாத்திரத்திற்குள்ளும் வெளியிலுமாக சிதறி விழுகின்றது. இரண்டுபக்கக் கடைவாயிலிருந்தும் திரவம் வழிய, ஓணான் போல நாக்கை நீட்டிச் சுழலவிட்டு வழித்து உள்ளே தள்ளினாள். குழைத்துக் குழைத்து எல்லோருக்கும் குழையலாக நீட்டுகின்றாள்.

‘‘உம்... சாப்பிடுங்கள்!’’ கடவுளின் பிரசாதம்... அவர் வாயிலிருந்து விழுந்த எச்சில்பண்டம்... என்ன செய்வது..?

வந்தவர்கள் கோவில் பிரசாதத்தை மருந்து போல விழுங்கினார்கள். விழுந்தடித்துகொண்டு வேகமாக விடை பெற்றார்கள். எல்லாரும் போய்ச் சேர்ந்ததும், ‘‘எப்பிடி என்ரை விளையாட்டு...!’’ என கனகா கணவனிடம் கேட்டாள்.

---

# யேர்மனியில் சாதனை படைத்த சிறுமி!..
## கணக்குக் குட்டிப்புலி!

வ.சிவராஜா
(யேர்மனி)

நாம் பாடசாலையில் படிக்கும் காலத்தில் கணக்குப்பாடம் படிக்கும்போது சிறப்பாக, வேகமாக விடைகளைக் கண்டுபிடிக்கும் போது இவன் அல்லது இவள் கணக்கில ஒரு புலி என்று ஆசிரியர்கள் சொல்வது வழமை.அதேபோலதான் யேர்மனியிலும் கணக்கில் ஒரு குட்டிப்புலி.

யேர்மனியிலுள்ள நோத் றைன் வெஸ்பாளின் (Nordrhein westfalien) மாநிலத்தில் எசன் (Essen) நகரத்தில் இலங்கையிலிருந்து வந்து குடியேறிய சுமார் 300 தமிழ்க் குடும்பங்களுக்கும் அதிகமானோர் வாழ்கிறார்கள்.

இங்கு வாழும் திரு பவான் அவர்களின் புதல்வி செல்வி ஆரபி.பவான் [10 வயதுச்சிறுமி] அவர்கள், சிறு வயதிலிருந்தே கணக்குப்புலியாக உருவெடுத்துவிட்டார். தற்போது 4ம் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும் போதே இந்த மாநிலத்தில் 23.500 மாணவர்கள் கலந்துகொண்ட கணக்குப் போட்டியில் 43 பேர் தெரிவானார்கள். அவர்களில் ஆரபி அதிகப் புள்ளிகள் பெற்று முதலாவதாகவும் திகழ்கிறார். இவர் பாடசாலையில் முன்பு எவரும் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டதில்லை. இவரே அதிலும் முதல்வர்.



ஆரபி பவான்

இவரின் திறமைகளைக் கண்டு பாடசாலை ஆசிரியர்கள் இவரை அந்த வகுப்புக்கு கணக்குப் பாடத்தை எனைய மாணவர்களுக்குக் கற்பிக்கவும் சந்தர்ப்பம் அளித்து வந்ததுடன் பாடசாலை கல்வியாளர்களாலும் பாராட்டுகளும் பரிசுகளும் பெற்றிருக்கிறார். இவரின் திறமையைப் பாராட்டி எசன் நகர மேயராலும் பாராட்டுப்பத்திரம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருக்கிறார். உலகப்புகழ்பெற்ற அமேசான் நிறுவனமும் பரிசு வழங்கிக் கௌரவித்திருக்கிறது.

தமிழாலயத்தில் தாய்மொழியாம் தமிழும் சங்கீதமும் கற்றுவரும் இவரிடம் எதிர்காலத்தில் படித்து என்ன தொழில் செய்ய விரும்பம் என்று கேட்டபொழுது கட்டிடக்கலை நிபுணராக (Architecture) வரவே விரும்பம் எனத் தெரிவித்துள்ளார். இனி 5 வகுப்பிற்காக யேர்மனியின் முதல்தரப் பாடசாலையான Gymnasium செல்லவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்க விடையமாகும். உலகத் தமிழர்களுக்கும் பெருமைதரும் சிறுமியை. கல்வியில் பல சாதனை படைக்க வெற்றிமணி வாழ்த்தி மகிழ்கிறது.



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# லண்டன் தமிழர்களிடமிருந்து
## கார்த்திக் சுப்புராஜுக்கு ஒரு திறந்த மடல்












விமல் சொக்கநாதன்
(இங்கிலாந்து)

**வணக்கம்**

என்னை உங்களுக்குத் தெரியாது. ஆனால் நான் பெருமையோடு உறுப்புரிமை வகிக்கும் லண்டன் வாழ் இலங்கைத் தமிழ் குடும்பங்களைப் பற்றி நீங்கள் சரியாக அறியவே இல்லை என்பதை Netflix ல் இப்போது வெளியாகியுள்ள உங்கள் படம் ஜெகமே தந்திரம் நிரூபித்திருக்கிறது.

2016ல் வெளியான உங்கள் படம் –இறைவி– பலரின் மனதையும் தொட்டது. வெவ்வேறு தொழில்களைப் புரியும் வெவ்வேறு பெண்கள் அவர்களின் கணவரால், காதலனால், சரியாக மதிக்கப்படவில்லை என்பதை நீங்கள் காட்டியிருந்த விதத்தினால் பட ரசிகர்கள் மனதில் நீங்கள் உயர்ந்து நின்றீர்கள். அவர்கள் ஒவ்வொருவருமே ஒரு இறைவி [பெண் தெய்வம்] என்று நீங்கள் காட்டியிருந்தீர்கள் அபாரம். இத்தனைப் புகழையும் பாராட்டையும் உங்கள் இப்போதையப் படம் ஜெகமே தந்திரம் தவிடு பொடியாக்கியிருக்கிறது.

இந்தியா–பிரிட்டன் ஆகிய இரண்டு பெரிய நாடுகளையும் சம்பந்தப்படுத்தி ஒரு கதையை உருவாக்கும் போது, அது பற்றி நீங்கள் எந்தவிதமான ஆய்வும் செய்ததாகத் தெரியவில்லை. மும்பை திரையுலகத்தினரோ, ஹாலிவுட் படத் தயாரிப்பாளர்களோ இப்படியொரு கதையைப் படமாக்கும் முன்னர் Research– கதை ஆராய்ச்சிக்காக கணிசமாகச் செலவிட்டிருப்பார்கள். ஆனால், நீங்களோ உங்கள் தயாரிப்பாளர் சசி காந்த் அவர்களோ கதை ஆய்வுக்கென எவ்வித நேரத்தையோ, பணத்தையோ செலவிட்டதாகத் தெரியவில்லை. இலங்கையிலிருந்து வெளியேறும் தமிழ் அகதிகளை தோணிகளில் ஏற்றிவந்து இலண்டன் கடற்கரைகளில் இறக்கிவிடும் புனித கைங்கரியத்தை செய்து வருகிறார் சிவதாஸ் என்ற ஒரு இலங்கைத் தமிழர். இலங்கை தமிழர்களைக் கடத்திக் கொண்டுவந்து பிரிட்டனில் இறக்கி விடுவது மட்டுமல்ல, அவர்கள் வாழ்வதற்கு வழிகள் புரிந்து தமது மீன்பிடி வள்ளங்களிலும் வேறு இடங்களிலும் இந்த இலங்கை அகதிகளை சிவதாஸன் பயன்படுத்துகிறார்.

கடத்தல் மன்னன் சிவதாஸமும் அவரது இலங்கைத் தமிழ் அகதிகளும் பொஸ்னியா, உக்ரைன் போன்ற நாடுகளுக்கு வள்ளங்களில் போய் மீன் வியாபாரம் என்ற போர்வையில் இயந்திர துப்பாக்கிகள், குண்டுகள் மற்றும் தங்கம் போன்றவற்றை மீன்களோடு கொண்டுவந்து இங்கு பிரிட்டனில் இறக்குகிறார்கள். முதிய குஜராத்தி மனிதர் ஒருவர் இறந்ததும் அவருக்கு இறுதிச் சடங்குகள் செய்வதற்கு சிவதாஸன் அமரர் ஊர்தி ஒன்றை அனுப்புகிறார். அந்த வண்டியில் கூரைக்குள்ளும் சவப்பெட்டிக்கு அடியிலும் ஆயுதங்கள், தங்கம் ஆகியவை கடத்தப்படுகின்றன. இலங்கை அகதிகளை வைத்து இப்படியாகக் கடத்தல் செய்து இலங்கையர் சிவதாஸனை முறியடித்து அவரது வர்த்தகத்தை கைப்பற்ற விரும்பினார் ஒரு பிரிட்டிஷ் வெள்ளைக்கார தாதா– பெயர் ஜேம்ஸ். இதற்காக தமிழ்நாடு மதுரையிலிருந்து [உங்கள் சொந்த ஊர் மதுரை என்பதும் எமக்குத் தெரியும்] ஒரு தமிழக ரவுடியை [தனுஷ்] இங்கே லண்டனுக்கு வரவழைக்கிறார் ஜேம்ஸ்.

ஒரு குஜராத்தி மனிதரின் இறுதிச் சடங்கை சிவதாஸனும் அவரது இலங்கை தமிழ் அகதிகளும் செய்துவிட்டு அவரது சடலத்தை தமது அமரர் ஊர்தியில் ஏற்றுகிறார்கள். வெள்ளைக்காரனுக்கு வேலை செய்யும் தனுஷ் அமரர் ஊர்தியை வழிமறித்து சடலத்தை வெளியே எடுத்துவிட்டு அமரர் ஊர்தியை அக்குவேறு ஆணிவேராகப் பிரித்து ஆயுதங்களையும் தங்கத்தையும் கைப்பற்றுகிறார்கள். பட்டப்பகலில் ஒரு இறுதி ஊர்வலம் இடைநிறுத்தப்பட்டு சடலம் பலவந்தமாக வெளியே எடுக்கப்படும் போது, ஐயா அந்த பிரிட்டன் வீதியில் ஆள் நடமாட்டமோ பொலிஸ்காரர்களோ கிடையாது.

ஐயா கார்த்திக், நீங்கள் நிறைய ஹாலிவுட் படங்களை பார்த்திருப்பீர்கள். ஆனால் பிரிட்டிஷ் ஆங்கிலப் படங்களைப் பார்த்திருந்தாலும் அவற்றுக்கும் ஹாலிவுட் படங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை அவதானித்திருக்க மாட்டீர்கள். அமெரிக்காவில் ஒரு கடையில் போய் சாக்லெட், பிஸ்கட், துப்பாக்கி ஆகியவற்றை யாரும் பணம் கொடுத்து வாங்கலாம். இந்த உரிமை அமெரிக்க அரசியல் சாசனத்தில் அமெரிக்க மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எந்தவொரு அமெரிக்க ஜனாதிபதியும் மக்களின் இந்த உரிமையில் கைவைக்கத் துணிய மாட்டார். ஆனால் இங்கு பிரிட்டனில் கதையே வேறு. இங்கு யாருமே துப்பாகி வைத்திருக்கக் கூடாது.

பொலிஸ்காரர்கள் கூட காவல் கடமைக்குச் செல்லும் போது துப்பாக்கியை எடுத்துச் செல்ல மாட்டார்கள். பிரிட்டிஷ் பொலிசாரின் தோளில் ஒரு சிறிய வானொலி தொடர்பு சாதனம் எந்த நேரமும் இயங்கிக் கொண்டிருக்கும்.

ஒவ்வொரு பொலிசாரும் அந்த வானொலி மூலம் பொலிஸ் தலைமையகத்தை அழைத்து பலநூறு பொலிசாரையும் ஆயுதங்களையும் வரவழைக்க முடியும்.

06 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# லண்டன் தமிழர்களிடமிருந்து

## கார்த்திக் சுப்புராஜுக்கு ஒரு திறந்த மடல்

05 ஆம் பக்கத் தொடர்ச்சி...

ஆனால் அப்படி நடப்பது மிகவும் அரிது. நெருக்கடியான ஒரு சூழலைச் சமாளிக்கச் செல்லும் பொலிஸ் வீரர்கள் குழுவில் Sten Gun எனப்படும் மின் துப்பாகி இருக்கும். அதனைச் சுட்டால் குண்டுகள் எதுவும் வெளிவராது. 5000 வோட்ஸ் மின்சாரத்தை அது உமிழ்ந்து எதிரியைச் செயலிழக்கச் செய்து வீழ்த்திவிடும். ஆனால் அவரை இது கொல்ல மாட்டாது.

உங்கள் வீட்டிற்குள் ஒரு திருடன் வந்துவிட்டால் பொலிஸாரை அழைக்கலாம். பொலிஸ் குழு உடனே வரும். திருடன் கையில் துப்பாக்கியுடன் வந்தான் என்று நீங்கள் சொன்னால் அடுத்த விநாடி உங்கள் வீட்டைச் சுற்றி கவச உடை தரித்த ஆயுதப் பொலிஸார் ஹெலிகாப்டர் மூலம் அங்கு வருவார்கள். உங்கள் சுற்றாடலிலுள்ள வீடுகளில் எல்லோர் கதவிலும் தட்டி மக்கள பாதுகாப்பாக வெளியேற்றுவார்கள். முதலுதவி சிகிச்சை வழங்க வண்டிகள் தயாராக நிற்கும். நாற்புறமும் கடலால் சூழப்பட்ட இந்த மாபெரும் தீவில் துப்பாக்கிகளையே அனுமதிப்பதில்லை. யாரும் அவற்றை பயன்படுத்தவே முடியாது. இது உங்கள் படத்திலுள்ள மாபெரும் ஓட்டை. துப்பாக்கிகளை கடத்திக் கொண்டு நாட்டிற்குள் கொண்டு வருவதே இங்கு வாழும் பிரிட்டிஷ் தமிழ் குடும்பங்கள்தான் என்று படத்தில் நீங்கள் காட்டியிருப்பது மதுரை தமிழரான உங்களுக்கு இழுக்கு. பிரிட்டிஷ் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு அவமானம். நீங்கள் செய்திருப்பது மாபெரும் துரோகம். இந்தியாவில் தமிழகத்திற்கு வடக்கே உள்ள அதிகாரிகள் யாரோடு பேசினாலும் ஹிந்தியில் தான் பேசுகிறார்கள். இத்தனைக்கும் ஹிந்தி இந்தியாவின் தேசிய மொழி அல்ல. எனவே ஆங்கிலம் தமிழ் ஆகியன அவர்களுக்குத் தெரியாது. தெரிய வேண்டிய அவசியமும் இல்லை. இலங்கை தமிழர்கள் என்றால் அவர்கள் பயங்கரவாத, சட்ட விரோத கும்பல் என்று வட இந்தியாவில் நிலவும் தப்பான கருத்தை உங்கள் திரைப்படம் உறுதிப் படுத்தியிருக்கிறது.

பிரிட்டன் வாழ் இலங்கைத் தமிழர்கள் பற்றிய அடிப்படை அறிவு உங்களுக்கும் உங்களது படக் குழுவினருக்கும் சூனியம் என்பதால் தான் இலங்கைத் தமிழர்கள் மீது இவ்வளவு மோசமான அழுக்கை நீங்கள் பூசியிருக்கிறீர்கள். அன்னை திரௌபதியை கொடிய கௌரவர்கள் துகிலுரிந்தது போல நீங்கள் செய்திருக்கிறீர்கள் எங்களை நிர்வாணப்படுத்தியிருக்கிறீர்கள்.

பிரிட்டனில் வாழும் இலங்கை தமிழர்கள் காலை முதல் இரவு வரை வெயிலென்றும் பனி மழையென்றும்



பாராமல் ஓடியோடி உழைக்கிறார்கள். தங்கள் இளைய தலைமுறை, தாங்கள் பெற முடியாமல் போன உயர்கல்வியை, பட்டங்களைப் பெற வேண்டும் என்று தீராத அவா கொண்டு உழைக்கிறார்கள். தமக்கு தமது அரசாங்கத்தால் மறுக்கப்பட்ட பட்டப்படிப்பு வாய்ப்புகளை இங்கிலாந்தில் ஆக்ஸ்ஃபோர்ட், கேம்பிரிட்ஜ் போன்ற உயர் கல்விக் கூடங்களில் தமது பிள்ளைகளாவது பெற வேண்டும் என்ற வேட்கையோடு குழந்தைகளை வளர்க்கிறார்கள். அதில் அமோக வெற்றியும் கண்டு வருகிறார்கள். மருத்துவர், கணக்காளர், வழக்கறிஞர், பொறியியல் நிபுணர், வானவியல் நிபுணர், பங்குச் சந்தை முதலீட்டுத் தரகர் இப்படி பல்வேறு துறைகளில் சித்தி பெற்று, பிரிட்டனில் தனியாகவும் அரசாங்கத்திலும் பொறுப்பான பதவிகளை வகித்து வருகிறார்கள். ஓய்வு நேரத்தில் தமிழ் பள்ளிக்கூடங்கள், இசை நடனப் பயிற்சிகள், அரங்கேற்றங்கள் என்று அவர்களின் நேரம் செலவிடப்படுகிறது. விடுமுறை நாட்களில் தாயகம் சென்று மருத்துவமனைகளிலும், முதியோர் இல்லங்களிலும் தொண்டு அடிப்படையில் பணியாற்றி பாராட்டுகளையும் பத்திரங்களையும் பெற்றுக் கொண்டு பிரிட்டன் திரும்புகிறார்கள்.

பிரிட்டனின் இளம் தமிழ் யுவதிகள் பலர் லண்டனின் இரண்டடுக்கு சிவப்பு பஸ் வண்டிகளில் ஓட்டுநர்களாக பிரிட்டனின் தெருக்களில் ஓட்டி வருவதே ஒரு அழகு. இப்படியாகக் கஷ்டப்பட்டு வேலை செய்யும் பிரிட்டிஷ் தமிழ் மக்களை ஒட்டு மொத்தமாக இலங்கை அகதிகள் –கடத்தல்காரர்கள், துப்பாக்கிதாரிகள் என்று முத்திரை குத்தி ஜெகமே தந்திரம் என்ற பெயரில் நீங்கள் பிரச்சாரப் படமெடுத்திருப்பது வட இந்திய அதிகாரத் துறையின் சில இனத்துவேஷவாதிகளின் ஆலோசனையின் பெயரிலா? என்று நான் கேட்க விரும்புகிறேன்.

வெள்ளையின தாதாவாக நடிக்கும் ஜேம்ஸ் காஸ்மோ ஆப்ரிக்க கறுப்பினத்தவர் பற்றியும் இந்தியர்களைப் பற்றியும் இனவெறி ஆங்கிலத்தை அள்ளி வீசிக் கொண்டிருக்கிறார். இங்கு பிரிட்டனில் நாம் அன்றாட வாழ்வில் சந்திக்கும் ஆங்கிலேயர்கள்



இந்த சாக்கடை ஆங்கிலம் பேசுபவர்கள் கிடையாது. ஏனென்றால் அது இங்கு சட்ட விரோதம்.

கடைசி கட்டத்தில் வில்லன் ஜேம்ஸ் காஸ்மோவை தனுஷ் குழுவினர் கொல்லவில்லை. மாறாக அவரது பிரிட்டிஷ் கடவுச் சீட்டை பறித்துக் கொண்டு மாட்டுத்தாவணி கடவுச் சீட்டு ஒன்றை அவரது கையில் திணித்து தோணி ஒன்றில் ஏற்றி முன் பின் தெரியாத இரான்ஃஈராக் அருகே ஒரு பாலைவனத்தில் இறக்கி விடுகிறார்கள்.

பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராடிய காந்தியடிகள் பற்றி ரிச்சர்ட் அட்டன்பரோ தயாரித்த படம் லண்டனில் வெளியான அன்று முதல் நாள் முதல் காட்சிக்கு நானும் போயிருந்தேன் ரசித்தேன். படத்தின் முடிவில் பட ரசிகர்கள் எவரும் பஸ் பிடிப்பதற்காக அவசரமாக எழுந்து போகவில்லை. ஆனால் அனைவரும் அமைதியாக எழுந்து நின்று மிக நீண்ட நேரம் கரகோஷம் எழுப்பினார்கள். அந்த கரவொலி அடங்க பல நிமிடங்கள் பிடித்தன. அதே போல பி ஆர் பந்துலு அவர்கள் தயாரித்த வீரபாண்டிய கட்டபொம்மன் படம், தமிழர்கள் மத்தியில் மட்டுமல்ல ஆங்கில மக்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பை பெற்றது.

இப்போது உங்கள் மனதைத் தொட்டுச் சொல்லுங்கள். பிரிட்டனில் தயாரிக்கப்பட்ட ஜெகமே தந்திரம் என்ற இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிரான படத்தை வெள்ளையினத்தவர்கள் குறைந்தது 25 பேருக்காவது உங்களால் திரையிட்டு காட்ட முடியுமா? அமைதியை விரும்பும் பிரிட்டன் வாழ் தமிழ் இனத்தவர்கள் உங்கள் ஜெகமே தந்திரம் அவர்களுக்கு ஏற்படுத்தியுள்ள மன வலியை, வேதனையை மறக்க மாட்டார்கள். எமது தாயகத்தில் முன்னணி தமிழ் அரசியல்வாதிகளில் ஒருவரும், இலங்கையில் வெற்றி பெற்ற முதல் தமிழ் படமான புதிய காற்று படத்தை தயாரித்த திரு வி.பி கணேசனின் மகனுமான மனோ கணேசன் அவர்கள் உங்களின் இந்தப் படம் பற்றி சலிப்புடன் விமர்சித்துள்ளார். அதிலிருந்து சில வரிகள். இயக்குனர் கார்த்தி சுப்புராஜ், இந்த உலகத்துக்கு ஏதோ சொல்ல வாறார் என தெரிகிறது. ஆனால், என்ன சொல்ல வருகிறார் என்பது கடைசிவரை சரியா புரியலை. தனுஷ், ஜேம்ஸ் கொஸ்மோ, ஜோர்ஜ், ஐஷ்வர்யா. நடிகர்களின் திறமை வேஸ்ட். கடைசி காட்சி அபத்தத்தின் உச்சம்.

இன்றைய தமிழ்த் திரையுலகம் புலம் பெயர்ந்த மக்களின் ஆதரவிலேயே தங்கியுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. திரைப்படம் என்பதில் கற்பனைக்கும் இடமுண்டு, விருப்பமிருந்தால் பார்க்கலாம், யாரையும் பார்க்க வேண்டும் என்று நாங்கள் வற்புறுத்தவில்லை,படம் பார்ப்பது அவர்களது விருப்பம் மற்றும் உரிமை என்று நீங்கள் எதிர்வாதம் செய்யலாம். ஆனால் ஒரு படத்தை மட்டுமல்ல, அந்தப் படைப்பாளியின் எதிர்காலப் படைப்புகளையும் படங்களையும் புறக்கணிக்கும் உரிமையும் புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு உண்டு என்பதும் மறுக்க முடியாத உண்மை.





விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# நம் ஆயுளில் முக்கால்வாசி சமூக அந்தஸ்தினை அடையப் போராடுவதிலேயே கழிந்துவிடுகிறது!



## "Status" "Status" "Status"

எங்களுடைய பெரும்பாலான திருமணங்கள் எல்லாமுமே "status" [அந்தஸ்து] என்ற ஒன்றினை அடிப்படையாக வைத்துதான் தீர்மானிக்கப்படுகின்றன. காதலுக்குக் கண்ணில்லை என்று காதல் திருமணங்களை நிராகரிக்கும் பெற்றோர், பெரியவர்களாகப் பார்த்து திருமணங்களை ஒழுங்கு செய்யும்போது அவர்களது அனுபவத்தின் அடிப்படையில் சாதகபாதகங்களையெல்லாம் சீர்தூக்கிப்பார்த்து, ஒரு நல்ல முடிவாகத்தான் எடுப்பார்கள் என்று பொதுவாக கூறப்பட்டாலும், அவர்கள் பார்க்கும் சாதகபாதகங்கள் எதுவென்றால் ஜாதி,மதம்,வரதட்தனை, குடும்பப் பின்னணி, உத்தியோகம், ஜாதகம், பொருளாதாரம்போன்ற அந்தஸ்தின் அடிப்படையில் அவர்கள் தங்கள் முடிவுகளை எடுக்கிறார்கள்.

திருமணவயதடைந்த ஒரு ஆண் அல்லது பெண்ணுக்கு திருமணம் செய்து வைத்துவிடுவதை பெரியவர்கள் ஒரு கடமையாக, தங்களுக்கிருக்கும் ஓர் பொறுப்புணர்வாக சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால், தனக்குப் பிடித்த ஒரு துணையினை தேர்ந்தெடுப்பதில் ஆணுக்கும் பெண்ணுக்கும் முழுமையான சுதந்திரத்தை இந்த சமூக – குடும்ப கட்டமைப்பு கொடுத்திருக்கின்றனவா? தங்களுடைய பிள்ளைகளின் திருமணங்களில் இன்றும் கூட முழுமையான சுதந்திரத்தினை அவர்கள் கொடுக்கத் தடையாக இருக்கும் காரணங்கள்தான் நான் ஏலவே குறிப்பிட்டுள்ள ''அந்தஸ்து'' என்ற விடயம். இந்த அந்தஸ்துப் பட்டியலில் ஏதேனும் ஒன்று குறைந்தால்கூட மனதால் ஒன்றுபட்ட இருவர் வாழ்க்கையில் ஒன்றுசேர இயலாமல், கட்டாயத்தின் பெயரில் தத்தமது அந்தஸ்துக்கேற்ப வேறொருவரை திருமணம் செய்துகொள்கின்றனர்.



பிரியா இராமநாதன்
(இலங்கை)

''சமூக அந்தஸ்து'' என்ற ஒன்று மிகவும் முக்கியமான தவிர்க்க முடியாத ஒன்றாக நம்முடைய வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்துவிட்டிருக்கிறதுபோலும். அந்தஸ்து குறைந்துவிட்டால் நம்மை யாரும் மதிக்க மாட்டார்கள் என்ற எண்ணம் நம்முடைய ஆழ்மனதில் பதிந்துபோய்விட்ட ஒன்று. மனிதனை ஓர் சமூக விலங்கு என்பார்கள், அதற்கிணங்க நம்மைச் சுற்றியுள்ளவர்களிடையே நாம்தான் முதன்மையானவராக முக்கி யமானவராக தென்பட வேண்டுமென்ற ஆசை கொண்டபோதே இந்த ''அந்தஸ்து'' என்ற ஒன்று இயல்பாகவே உருவாகியிருக்ககூடும் என்கிறார்கள்.

இந்த அந்தஸ்தினை அடைவதற்க்காக நாம் ஒவ்வொருவரும் படும் பிரயத்தனம் சொல்லிமாளாதவை. அந்தவகையில் சமூக அந்தஸ்தினை மூன்று வகையாக பிரிக்க முடியும். உழைப்பால் கிடைக்ககூடிய கல்வி, உத்தியோகம் போன்றவற்றால் கிட்டும் சமூகஅந்தஸ்து, இரண்டாவதுவகை தானாகக் கிடைக்ககூடிய சமூக அந்தஸ்தான தகப்பன் தாய் வழி வரும் சொத்து, சாதி போன்றவை. மூன்றாம் வகை சமூக அந்தஸ்துதான் திருமணம், ஆடம்பர பகட்டு போன்றவற்றால் வலிந்து தேடிக்கொள்ளும் வரட்டுக் கௌரவ சமூக அந்தஸ்து.





நம்முடைய ஆயுளில் பாதி ஏன் முக்கால்வாசி இந்த சமூக அந்தஸ்தினை பெற்றுக்கொள்வதில் போராடுவதிலேயே கழிந்துவிடுகிறது என்பதுதான் உண்மை. நட்பு, குடும்ப உறவு போன்றவற்றைவிட திருமணங்களில்தான் இந்த சமநிலை அந்தஸ்து என்பது மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. சம்பந்திகள் சமநிலை அந்தஸ்தில் இல்லாவிட்டால் அந்த திருமணங்கள் பெரும்பாலும் வெற்றியடைவதேயில்லை போலும்! ஏன், காதல் திருமணங்களின் தோல்விக்குக்கூட பிரதான காரணம் அந்தஸ்து வேறுபாடுதான் என்பதை எளிதில் மறுத்துவிட இயலாது. திருமணங்கள் சுவர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்ற முதுமொழி மாற்றப்பட்டு, திருமணங்கள் ரொக்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்ற புதுமொழி உருவாக்கப்பட்டுள்ள இன்றைய காலகட்டத்தில், சாதி, அழகு, பொருளாதார பின்னணி,கல்வி, குடும்பப்பின்னணி போன்றஅந்தஸ்து சல்லடைகளால் மணமக்கள் சலித்தெடுக்கப்பட்டு,வட்டிக்காவது கடன் வாங்கி ஆடம்பரமாக செலவு செய்து, திருமணங்களை நடாத்தி வைப்பதில்தான் தம்முடைய அந்தஸ்து இருப்பதாக காட்டிக்கொள்வோர்தான் இன்று அதிகம். இவர்களுக்கு பெரிய அளவில் திருமணங்களை நடாத்தி தம்முடைய அந்தஸ்து ''கெத்தினைக்'' வெளிப்படுத்திக்கொள்ளாவிட்டால் மிகப்பெரியதொரு கௌரவக் குறைச்சல். பத்திரிகை அடிப்பதில் ஆரம்பித்து, மண்டபங்களை குறைந்தது ஆறு மாதங்களுக்கு பதிவு, விதம்விதமான கல்யாணச்சமையலில் பணத்தை செலவிடுவது, மணவறை அமைப்பிலிருந்து, விடைபெறும்போது அதிதிகள் கையில் வரவுக்கு நன்றிகூறி கொடுத்தனுப்பபடும் குத்துவிளக்கு வரை எல்லாமும்

08 ஆம் பக்கம் பார்க்க...






கவிதா லட்சுமி (நோர்வே)

ஒரு வைத்தியனைப்போல
வக்கீலைப்போல
விவசாயியைப்போல
நீ தொழிலாளியாகலாம்
அல்லது விளையாட்டு வீரனாகவோ
முதலாளியாகவோ
கலைஞனாகவோ
எழுத்தாளனாகவோ
ஒரு தேசாந்திரி போல
இப்பிரபஞ்சத்தின் ஆன்மாவாகவோ
நீ உருவாகக்கூடும்
எனக்குத் தெரியவில்லை

இடதுசாரியாக
அகிம்சைவாதியாக
சோசலிசவாதியாக
கடும்போக்காளனாக
ஜனநாயகவாதியாக
சமூகப்போராளியாக
அல்லது இவையற்ற வேற்றொரு
கொள்கையைக் கொண்டிருக்கலாம்
உனது தேர்வுகளில்
தடை நிற்பதற்கில்லை நான்

இந்துவாய் கிருஸ்தவனாய்
இஸ்லாமியனாய்
பௌத்தனாய் அல்லது
கடவுள் மறுப்பாளனாய்
மனிதத்தை முன்னிறுத்தி
மதங்கள் கடந்ததொரு மனிதனாய்
எதுவானாலும்
எதையும் ஏற்றுக்கொள்ளும்
பக்குவம் உண்டெனக்கு

கோபக்காரனாய் அன்பானவனாய்
தட்டிக்கேட்பவனாய்
நக்கல்காரனாய் கருணைமிக்கவனாய்
பேராசைக்காரனாய்
வாழ்வின் அவதானியாய்க்கூட
வாழ்ந்துவிட்டுப்போகலாம்
நான் எதுவும் தெரிவிப்பதற்கில்லை

காதல்வயப்படாதவனாய்
ஓரினச்சேர்க்கையாளனாக
முன்றாம்பாலினமாக
அல்லது பிரபஞ்சத்தின்
மிகச்சிறந்த காதலனாக
நீ இருக்கலாம்
உனது உணர்வுகளை
உதாசீனப்படுத்துவற்கில்லை நான்

உன்னைப் பற்றிய
கேள்விகளுக்கெல்லாம்
தற்போது என்னிடம்
எந்தப் பதில்களுமில்லை.
சிறந்ததொரு சகமனிதனாய்
இருப்பாய் என்பதைத் தவிர

சமயங்களில்
ஒரு கவிதையின் இறுதியில்தான்
அதன் சாரமிருக்கக்கூடும்
என்பதை அறிந்துகொள்.

இனி மீண்டுமொருமுறை
இக்கவிதையை வாசித்துவிடு.

**- அம்மா**



# நம் ஆயுளில் முக்கால்வாசி சமூக அந்தஸ்தினை

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

வரவுக்கு நன்றிகூறி கொடுத்தனுப்பபடும் குத்துவிளக்கு வரை எல்லாமும் அந்தஸ்தின் அடையாளமாக! இப்படிப் பார்த்துபார்த்து செய்துவைக்கப்பட்ட அத்தனை திருமணங்களுமே வெற்றிகரமாக தொடர்கின்றனவா? [Covid 19 இதற்கு இடைக்காலத்தடை விதிக்கப்பட்டுள்ளது.]

இதில் இன்னுமோர் முக்கியமான விடயம்தனையும் குறிப்பிட்டேயாகவேண்டும், பொதுவாக மாப்பிள்ளையை தேர்ந்தெடுக்கும் பெண் வீட்டார் மாப்பிள்ளையை அளவிடும் அந்தஸ்த்துப் பட்டியலில் முதலிடத்தில் நோக்குவது அவரது உத்தியோகத்தை. அரச உத்தியோகம்தான் நிலையானது, பாதுகாப்பானது, சலுகைகள் நிறைந்தது, வருமானம் தரக்கூடியது போன்ற எண்ணங்களுடன் அரச உத்தியோக மணமகனை தேர்ந்தெடுக்கும் பலர், மாப்பிள்ளை வீட்டாரின் அதிகப்படியான எதிர்பார்ப்புகளையும்,கர்வத்தையும்கூட பொருட்படுத்தாது அந்தஸ்த்துக்காக டாக்டர்களையும், என்ஜீனியர்களையும் தேடும் கூட்டம் ஒருபுறம். வெளிநாட்டு மாப்பிள்ளைதான் தற்கால அந்தஸ்தின் அடையாளம் என்ற நோக்கில் தங்கள் வீட்டுப் பெண்களுக்கு அமெரிக்காவிலும்,லண்டனிலும்,அவுஸ்ரெலியாவிலும்,பிரான்சிலும் யேர்மனி யிலும், மணமகனுக்கான வேட்டையினைத் தொடரும் கூட்டம் இன்னொருபுறம். இதிலும் கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றால், இந்தப் பெண் வீட்டார் இந்த முடிவுகளுக்கு தாங்களாக முன்வருவதில்லை, அடுத்தவர்களைப் பார்த்துதான் சிலவிடயங்களை தங்களுக்கான அந்தஸ்த்தாக வரையறை செய்துகொள்கிறார்கள். உண்மையில் ஒரு மனிதனை அறிந்துகொள்ள உத்தியோகமும், வருமானமும், பண்புகளும் மட்டும் போதாது. எந்த உத்தியோகமும் நிலையில்லாததுதான். பண்புகளும், குணங்களும் எப்போது வேண்டுமானாலும் மாறலாம். ஆனால், ஒருவனிடம் எப்போதும் மாறாத ஒன்று உண்டு அதுதான் ஒவ்வொருவரினதும் ‘‘தனித் திறமை’’! அந்த ஒன்றே போதும் ஒருவனை அவன் வாழ்வில் முன்னேற்ற. திறமை இருந்தால் வருமானம் எந்த வகையிலும் வரும். திறமை இருந்தால்தான் அவன் செய்யும் வேலையே நிலைக்கும். வாழ்வின் எந்தச் சூழலிலும் கைகொடுப்பது இந்த திறமைதான். அந்தஸ்தின் அடிப்படையில் மணமகன் என்ன உத்தியோகம் பார்க்கிறான், வருமானம் எவ்வளவு என்றெல்லாம் கணக்கிடும் பெரியவர்கள் எந்தக் கஷ்டம் வந்தாலும் தங்கள் மகளைக் காப்பாற்றும் திறமை உள்ளவனா,வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளக் கூடியவனா என்று யோசிப்பது வெகு குறைவென்றே கருதுகிறேன். கலாசாரம் என்ற பெயரிலும் பிறர் எம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்ற, அந்தஸ்து வெறியிலும் தங்கள் பிள்ளைகளின் வாழ்வினை சீரழிக்கும் எத்தனையோ பெற்றோர் எம்மத்தியில் உள்ளார்கள். பிள்ளைகளின் குடும்பவாழ்வு என்ற ஒன்றினை மனதிற்கொண்டு அவர்கள் சந்தோசமே பெரிதென்று ஒவ்வொருவரும் நினைக்கும் காலம்வரும் போதே உண்மையான பொருத்தமான துணைகளை ஒவ்வொருவரும் தம்முடைய வாழ்வில் பெற்றுக் கொள்ள இயலும். தம்முடைய கடைசிக்கால சேமிப்பு வரை வீணாக்கி , கடன்வாங்கி எஞ்சியகாலம் முழுவதும் கஷ்டப்பட்டு போலியான அந்தஸ்தின் அடிப்படையிலான வாழ்வில் இணைந்திருப்போர் சற்று யோசித்துப்பார்க்கலாமே ?




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# தேவையற்ற மருந்துகள் நீக்கப்பட்ட சந்தோசத்திலேயே அவளது வருத்தம் அரைவாசியாகக் குறைந்து விட்டது




ஓடினாள் ஓடினாள் வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள்.. என்பது வாழ்க்கையின் அந்திம ஓரத்தில் இருக்கும் கலைஞர் அரசியல் ஜனன ஆரம்பத்தில் எழுதிய வசனம்... பராசக்தியில் சிவாஜி பேசியது... ஆனால் தொடர்வது வேறு கதை.

இருமினாள் இருமினாள். விழி பிதுங்கி மூச்சடக்கும் வரை இருமியவள். கதை இது.

என்னாலை ஒன்றுமே செய்ய முடியவில்லை.. அனுங்கிக் கொண்டே வந்த அந்தப் பெண்ணின் முகத்தில் சோர்வும், சோகமும் ஒட்டியிருந்தன. களைப்போடு வந்தவள் உட்கார்ந்து தன்னைச் சுதாகரித்துக் கொள்ள சில நிமிடங்களாயிற்று.

வயதானதால் ஏற்பட்ட களைப்பு அல்ல. இளம் பெண் 20-22 வயது மட்டுமே இருக்கும். சோர்ந்த கண்களைச் சுற்றி மடல்கள் சற்று வீங்கியிருந்தது. கண்களும் சற்றுச் சிவந்திருந்தது. இரண்டு வாரங்களாக இருமலாம். மிகக் கடுமையான இருமல். இருமி இருமி முடியாமல் சத்தியிலும் முடிவதுண்டாம். இதனால் சாப்பிடுவதும் குறைவு. சற்று மெலிந்தும் விட்டாளாம். மருந்தெடுத்தும் குறையவில்லை. இரண்டு வாரங்களுக்கிடையில் மூன்று வைத்தியர்களைக் கண்டும் குறையவில்லை.

சிறிய கட்டாக பரிசோதனை ரிப்போட்டுகளை என் முன் வைத்தாள். சரியாகத்தான் அவர்கள் ஆராய்ந்திருந்தார்கள். இரத்தம், சிறுநீர், சீனி, சளி, எக்ஸ் ரே என எதையும் விட்டு வைக்கவில்லை.

நிதானமாக அவற்றை ஆராய்ந்து பார்த்தபோது எந்த பிழைகளும் தெரியவில்லை. நியூமோனியா. சயரோகம், கட்டி, புற்றுநோய் எதற்கான அடையாளங்களும் கிடையாது. மிகக் கடுமையான அன்ரி பயரிக் மருந்துகள், ஆஸ்த்மாவிற்கான மருந்துகள், ஸ்டீரொயிட் என்று சொல்லப்படும் மருந்துகள், பல வகை இருமல் சிறப் மருந்துகள் கொடுக்கப்பட்டிருப்பதை அவதானித்தேன்.

தொண்டை, சுவாசப்பை, மூக்கு, காது என முக்கிய உறுப்புகளைப் பரிசோதித்துப் பார்த்த போது அவை யாவும் சிறப்பாக இயங்கிக் கொண்டிருப்பதை அறிய முடிந்தது. எவ்வளவு மருந்துகள் சாப்பிட்டு விட்டேன். ஒண்டும் பிரயோசனமில்லை. வயிறு ஊதி, வாய் கசந்து, சாப்பிட முடியாது போனதுதான் மிச்சம். வயிற்றையும் பிரட்டுகிறது. கொஞ்சமும் சுகமில்லை என்றாள்.

உண்மைதான் மாறி மாறி மூன்று வகை அன்ரிபயோடிக் மருந்துகளையும் பிரட்னிசலோன் போன்றவற்றையும் உட்கொண்டால் வயிற்றில்



குழப்பம் ஏற்படுவதை தடுக்க முடியாதுதான். மருந்துகளுக்கு மேலாக ஆஸ்த்மாவுக்கான இன்ஹேலரும் கொடுக்கப்பட்டிருந்தது. அதுவும் வேலை செய்யவில்லை. ஆஸ்த்மா இருந்தால் தானே அது வேலை செய்யும். ''இது என்ன வருத்தம்'' அவள் கேள்வி எழுப்பினாள்.

வீங்கிய மடல்களும், கண்ணின் வெண் பகுதியில் இரத்தம் கசிந்திருந்ததும், இருமல் வாந்தியில் முடிவதும், அது என்ன நோய் என்பதை எனக்கு ஓரளவு புலப்படுத்திவிட்டன. ஆயினும் நிச்சயப்படுத்தாது சொல்ல முடியாது.

நிச்சயப்படுத்துவதாயின் அவளது இருமல் எப்படியானது என்பதை அறிய வேண்டும்.

எப்படியானது உங்கள் இருமல்? தொடர்ந்து வருமா, திடீரென வருமா, வந்தால் பீறிட்டு வந்தது இருமல். எனது கேள்வி முடிவதற்கிடையில். இருமினாள், இருமினாள், இருமிக் கொண்டேயிருந்தாள். விழி பிதுங்கி மூச்சடக்கும் வரை இருமினாள். தொடர்ந்து இருமினாள். திடீரென ஒரு கேவல் சத்தம். உயிர் பிரியுமாற் போன்ற அவல ஒலி. நெஞ்சின் அடி ஆழத்திலிருந்து. பயப்படாதீர்கள்! எதிர்பார்த்ததுதான்.

இவ்வளவு நேரமும் சுவாசத்தை உள்ளெடுக் முடியாது, இருமி இருமி வெளியே விட்ட காற்றைத் திடீரென ஒரே மூச்சில் உள்ளெடுத்ததால் பீறிட்டு எழுந்த சத்தம். Whoop அதுதான் அந்தச் சத்தம். அந்தச் சத்தத்தை வைத்துத்தான் அந்த நோயின் பெயரே வந்திருக்கிறது. அதை கொண்டே நோயை நிச்சயப்படுத்த வேண்டும். இருமல் எப்படியானது என்ற கேள்விக்கு விடை சொற்களாக அன்றி செயற்பாடாகவே வந்துவிட்டது. எனது வேலை சுருங்கியது. நோய் தெளிவானது.

வூப்பிங் கொவ் (Whooping Cough) என ஆங்கிலத்தில் சொல்வது, மருத்துவத்தில் Pertussis ஆகும். தமிழில் குக்கல் என்போம். இப்பொழுது பெருமளவு காணப்படுவதில்லை. காரணம் சிறுவயதில் போடப்படும் முக்கூட்டு ஊசிதான். இந்நோய் குணமடைய நீண்டகாலம் எடுக்கும். சுமார் 6 வாரங்கள் முதல் 2 மாதங்கள் எடுக்கும்.

ஆரம்பகட்டத்தில் மட்டுமே அன்ரிபயோரிக் மருந்துகள் உதவும். அதுவும் ஒரு குறிப்பிட வகை அன்ரிபயோடிக் மட்டுமே. இவள் சாப்பிட்டதில் அது இல்லை. வீணாக ஏனையற்றை உண்டதுதான் மிச்சம்.

நீண்ட நாள் தொடரும் இந் நோயைப் பற்றி விளக்கி, அன்ரிபயோரிக் மருந்துகள் நிறுத்தி, இருமலைத் தணிக்கும் சாதாரண மருந்துகளை கொடுத்தேன். தேவையற்ற மருந்துகள் நீக்கப்பட்ட சந்தோசத்திலேயே அவளது வருத்தம் அரைவாசியாகக் குறைந்து விட்டது. எனது மருந்தால் அல்ல!

டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்









விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


INNENSTADT WEST
ortel MOBILE
DORTMUND
தமிழர் தெருவிழா
2021
மாபெரும் ஆடல் பாடல் கொண்டாட்டம்....
Strassenfest der Tamilen
04. & 05. SEP 21
Dortmunder U
Park der Partnerstädte
Bundesstraße 54
Westentor
Rheinische Str.
DORTMUNDER U - Park der Partnerstädte
Sa. 11:00 - 22:00 Uhr
So. 12:00 - 18:00 Uhr
தமிழர் அரங்கம்
VMDO
Der Verbund der sozial-kulturellen Migrantenvereine in Dortmund e. V.
HOUSE OF RESOURCES
TKD
Stadtteil-Schule
Dortmund e.V.
Bildung · Beratung · Begegnung
comdu.it
Deutschland
ஊடக அனுசரணை
வெற்றிமணி
அகரம்
IBC தமிழ்
GTV
தமிழ் MTV
STS தமிழ் TV
Lankasri
ETR
0151 633 633 33 | 0162 803 1647 | 0157 7351 7849 | 0177 679 4261 | 0151 27 990 990




● ஆனந்தராணி பாலேந்திரா (UK)

# ‘கண்ணாடி வார்ப்புகள்’

கடந்த இதழில் இலங்கையில் வெற்றிகரமாக மேடையேறிய எமது ‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடகத்தை லண்டனில் மீளத் தயாரிக்க ஆரம்பித்தது பற்றியும் அதில் என்னுடன் தர்ஷ்னி, வாசுதேவன், சிவசுதன் ஆகியோர் நடித்தது பற்றியும் எழுதியிருந்தேன்.

லண்டனில் இந்த நாடகத்தைச் சற்று வித்தியாசமாக பாலேந்திரா தயாரித்திருந்தார். இலங்கையில் மேடையேற்றியபோது அமெரிக்க நாடகத்தின் நேரடி மொழிபெயர்ப்பாக ‘கண்ணாடி வார்ப்புகள்’ அமைந்தது. லண்டனில் இதனைத் தமிழ்ச் சூழலுக்கு ஏற்றவாறு மாற்றி தமிழ்ப் பெயர்களுடன் தயாரித்தார். இலங்கையில் மகள் லோராவாக நடித்த நான் லண்டன் தயாரிப்பில் தாய் புவனாவாக நடித்தேன்.

எனது மகள் உஷாவாக நடித்த தர்ஷ்னி அப்போது லண்டனில் இருந்து தொலைவில் உள்ள Bath பல்கலைக்கழகத்தில்



Phd பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்தார். நாங்களும் மற்றைய இரு நடிகர்களும் லண்டனில் வசித்தோம். சனி அல்லது ஞாயிறு லண்டனில் இருந்து நாங்கள் அனைவரும் Bath பல்கலைக் கழகம் செல்வோம். தர்ஷ்னி ஒரு விரிவுரை மண்டபத்தை ஒத்திகைக்காக ஒழுங்கு செய்து வைத்திருப்பார். காலை முதல் மாலை வரை ஒத்திகைகள் நடக்கும். பின்னர் இரவுச் சாப்பாட்டையும் ஒரு உணவுச்சாலையில் முடித்துக்கொண்டு லண்டன் திரும்புவோம். சில வார இறுதி நாட்களில் தர்ஷ்னி ஒத்திகைகளுக்காக லண்டன் வருவார்.

‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடக ஒத்திகைகள் நடந்து கொண்டிருக்கும் போது நோர்வே நாட்டில் எமது நாடகமொன்றினை மேடையேற்ற நோர்வே தமிழ்ச் சங்கத்தினரிடம் இருந்து அழைப்பு வந்தது. ‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடகத்தினை ஒஸ்லோவில் 28-08-1999ல் மேடையேற்றினோம். இதனைத் தொடர்ந்து லண்டனில் பல தடவைகள் மேடையேற்றினோம். கனடாவில் 2000ஆம் ஆண்டும் ஜேர்மனியிலும் 2003இலும் மேடையேற்றப்பட்டது.

2013ம் ஆண்டு இலங்கையில் நாடகப் பயணம் ஒன்றை எமது நாடகக் குழுவினருடன் நாம் மேற்கொண்ட போது யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் ‘கண்ணாடி வார்ப்புகள் சுருக்கிய வடிவமாக எமது மற்றைய நாடகங்களுடன் மேடையேறியது. முதன் முதலாக 78ஆம் ஆண்டு ‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடகம் நடித்த அதே மேடையில் மீண்டும் 35 வருடங்களின் பின்னர் நடித்தது எனக்கு அளவில்லாத சந்தோசத்தைத் தந்தது. மண்டபம் நிறைந்த பார்வையாளர்கள் முன் நடித்தது இன்னும் கூடுதல் மகிழ்வைத் தந்தது. 2013ல் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியிலும் ‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடகத்தை மேடையேற்றினோம். அங்கும் மகாஜனக் கல்லூரி, யூனியன் கல்லூரி மாணவர்கள் என சுமார் 1000 பேர்வரை வந்திருந்து பார்த்தார்கள்.

**இலங்கையில் பாடசாலைகளில் ‘நாடகமும் அரங்கியலும்’ ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. பல்கலைக்கழகங்களிலும் இத்துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்கிறார்கள். பாடத்திட்டத்தில் பாலேந்திராவைப் பற்றியும் எமது அவைக்காற்று கலைக் கழகத்தைப் பற்றியும் மாணவர்கள் கற்கிறார்கள். அதனால் எமது நாடகங்களைப் பார்ப்பதற்கு பெருந்திரளான மாணவர்களும் வந்திருந்தார்கள்.**

எமது தமிழ் அவைக்காற்று கலைக் கழகம் 2018இல் 40ஆவது ஆண்டு நிறைவினையும், பாலேந்திராவும் நானும் நடத்தும் லண்டன் தமிழ் நாடகப் பள்ளியின் 15ஆவது ஆண்டு நிறைவையும் கொண்டாடும் முகமாக ஒரு பெரிய விழாவினை நடத்தத் திட்டமிட்ட போது பாலேந்திராவிற்கு ‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடகத்தை எமது நாடகப் பள்ளியின் இளையவர்களை வைத்துத் தயாரிக்கும் எண்ணம் வந்தது. இம்முறை மீண்டும் இலங்கையில் தயாரித்தது போன்றே நேரடி மொழிபெயர்ப்பாக இதனைத் தயாரித்தார்.

நான் தாய் அமென்டா பாத்திரத்தில் நடிக்க மகள் லோரா பாத்திரத்தில் சரிதா அண்ணாத்துரை நடித்தார். இவர் ஏற்கனவே 2013 ல் யாழ்ப்பாண மேடையேற்றத்தில் மகளாக நடித்திருந்தார். மகன் ரொம்மாக ஜெனுசன் ரொபின்சன், விருந்தாளி ஜிம்மாக சந்தோஷ் ஆனந்தன் ஆகியோர் நடித்தனர். இவர்கள் அனைவரும் புலம் பெயர் நாட்டில் பிறந்து வளரும் இளையோர். சிறுவர்களாக எமது சிறுவர் நாடகங்களில் பங்குபற்றியவர்கள். எமது லண்டன் தமிழ் நாடகப் பள்ளியில் பயிற்சி பெற்றவர்கள் என்பதால் மேடையில் இயங்கும் முறைகள் அவர்களுக்கு இலகுவாக வந்தது.

தமிழ் ஓரளவு வாசிக்கத் தெரிந்திருந்த இவர்கள் ஆங்கிலத்திலும் ‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடகப் பிரதியை வாசித்துப் பாத்திரங்களின் தன்மைகளை நன்கு உள்வாங்கி மிகச் சிறப்பாக நடித்தனர். தமிழ் உச்சரிப்பைத் திருத்துவதற்குக் கூடிய நேரம் எடுத்தது. குறிப்பாக மகனாக நடித்த ஜெனுசனுக்கு அப்போது 19 வயதுதான். மிக நீண்ட தொடர் ஒத்திகைகளின் போது எல்லாரும் ஆர்வமாகப் பங்குபற்றினார்கள். 29-09-2018இல் லண்டனில் நடந்த எமது 40ஆவது ஆண்டுவிழாவில் ‘கண்ணாடி வார்ப்புகள்’ மூன்றாவது மீள் தயாரிப்பாக மேடையேறியது. நாடகத் துறையில் நீண்ட அனுபவம் கொண்ட என்னுடன் ஈடு கொடுத்து இந்த இளையவர்கள் நன்றாக நடித்து எல்லோரது பாராட்டுகளையும் பெற்றுக்கொண்டனர்.

எமது 40ஆவது ஆண்டு நிறைவு நாடகவிழாவைப் பார்க்க வந்திருந்த இலங்கைத் தமிழ்ப் பாடசாலைகள் ஒன்றியம் – பிரான்ஸ் பாஸ்கரன், பிரான்ஸ்சில் இந்த நாடகங்களைத் தாம் ஒன்றியத்தின் நிதி சேகரிப்பிற்காக மேடையேற்ற விரும்புவதாகத் தெரிவித்தார். 08-12-2018 அன்று பாரீஸ் புறநகர்ப் பகுதியில் எமது நாடகவிழா நடைபெற்றது. இதில் ‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடகமும் மேடையேறியது. மஞ்சள் அங்கித் தொடர் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த அவ்வேளையிலும் 600க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் நிகழ்ச்சிக்கு வந்திருந்து ரசித்தார்கள். பாஸ்கரனும் அவரது குழுவினரும் எம்மை அரங்கிற்கு அருகிலேயே தங்க வைத்து, நன்றாக உபசரித்தது மறக்கமுடியாது. ‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடகம் 2013 ஆம் ஆண்டு நூலாக வெளிவந்தது. இந்த நாடகம் 32 தடவைகள் மேடையேறிய ஒரு வெற்றி நாடகமாகும். ■

மிகுதி அடுத்த இதழில்...

எமது அடுத்த கப்பல் 2021 October 25 ஆம் திகதி செல்வதனால் அதற்கு முன்பு உங்கள் பொதிகளை
எமது RAJU PARCEL SERVICE ஏஜென்டிடம் 2021 October 25 ற்கு முதல் ஒப்படைக்கவும்




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

# ஈழத் தமிழர் விவகாரத்தை மேற்கு நாடுகள் கைவிட்டுவிடும் ஆபத்து?



என்பதில், 1970 களின் பிற்பகுதியில் இருந்தே அமெரிக்கா ஆர்வமாக இருந்திருக்கின்றது. அமெரிக்கா – சோவியத் யூனியன் பனிப்போர் உச்சத்திலிருந்த அந்தக் காலத்தில், ஆசியப் பிராந்தியத்தில் தமது தளங்களை அமைப்பதில் அமெரிக்கா அக்கறைகாட்டி வந்தது என்பது அனைவருக்கும் நினைவிருக்கலாம்.

1977 இல் அதிகாரத்துக்கு வந்த ஜெயவர்த்தன அமெரிக்கா சார்பான ஒருவராகவே இருந்தமை அதற்கு வாய்ப்பாக இருந்தது. திருமலையை அவர் அமெரிக்காவுக்குக் கொடுக்கப் போகின்றார் என்ற கருத்துக்கள் பரவலாக வெளிவந்த அதேவேளையில், புத்தளம், இரணவில பகுதியில் வோய்ஸ் ஒப் அமெரிக்காவுக்கு ஜெயவர்த்தன இடமளித்திருந்தார். இவை அப்போது இந்தியாவுக்குத்தான் சீற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. 1987 இல் கைச்சாத்திடப்பட்ட இலங்கை – இந்திய உடன்படிக்கையில் இதன் பிரதிபலிப்பையும் அவதானிக்கலாம். அதாவது, வெளிநாட்டுப் படைகள் தளம் அமைப்பதற்கு இலங்கை இடமளிக்கக்கூடாது என உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்போது இருந்த பனிப்போர் நிலை இப்போது மாறிவிட்டது. அமெரிக்காவுக்கு எதிரான சோவியத் யூனியன் தலைமையிலான முகாமில் இந்தியா அப்போதிருந்தது. அந்த முகாம் இப்போது இல்லை. உலக ஒழுங்கு மாற்றமடைந்திருக்கும் பின்னணியில், சீனாவின் ஆதிக்கம் அதிகரித்திருக்கின்றது. சீனாவை எதிர்கொள்வது என்ற நிலையில்தான் இந்தியா இன்று அமெரிக்காவுடன் இணைந்து செயற்படுகின்றது. இலங்கையில் தன்னால் நேரடியாகச் செய்யமுடியாத சிலவற்றை அமெரிக்காவின் மூலமாகச் செயற்படுத்துவதற்கு இந்தியா முற்பட்டிருப்பதும் தெரிகின்றது. இலங்கையில் முகாம் அமைக்கும் அமெரிக்காவின் முயற்சிகளை 1980 களில் கடுமையாக எதிர்த்த இந்தியா இப்போது அவ்வாறு எதிர்க்கும் நிலையில் இல்லை. அதிகரித்துள்ள சீனாவின் ஆதிக்கத்தை எதிர்கொள்வதற்கு இதனை ஏற்றுக்கொள்வதற்கு இந்தியா தயாராகவுள்ளது. திருமலையில் உள்ள பாரிய எண்ணைக்குதங்கள் தற்போது இந்தியாவிடம்தான் உள்ளது. இந்த நிலையில், சீனாவின் ஆதிக்கத்தை திருமலையில் முழுமையாகத் தவிர்த்துக்கொள்வதற்கு அமெரிக்காவின் பிரசன்னத்தை இந்தியா ஏற்றுக் கொள்ளலாம் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சீனாவுடனான இலங்கையின் நெருக்கமான உறவுகள் சர்வதேச மட்டத்தில் இலங்கைக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியிருந்தமை வெளிப்படை. குறிப்பாக, அமெரிக்க காங்கிரஸில் அண்மையில் கொண்டுவரப்பட்ட இலங்கை குறித்த பிரேரணையின் பின்னணியும் இதுதான். பொறுப்புக்கூறல் உட்பட பல விடயங்களை உள்ளடக்கியதாக இந்தப் பிரேரணை அமைந்திருந்த போதிலும், தமது பூகோள அரசியல் இலக்குகளை அடைவதற்கான உபாயமாக தமிழர்களுடைய பிரச்சினையை அந்த நாடுகள் பயன்படுத்தியிருக்கின்றன என்பதே உண்மை. இந்த வகையில், திருமலையை நீண்டகால குத்தகையில் அமெரிக்காவுக்குக் கொடுப்பதன் மூலம், மேற்குலகின் அழுத்தங்களை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்ள முடியும் என்பது இலங்கையின் உபாயமாக இருந்திருக்கலாம்.

மோசமடைந்துள்ள இலங்கையின் மேற்கு நாடுகளுடனான உறவுகளைச் சீரமைக்கக்கூடிய ஒன்றாகவே பஸில் ராஜபக்ஷவின் அரசியல் மீள்வருகை எதிர்பார்க்கப்பட்டது. அமெரிக்கப் பிரஜாவுரிமையையும் பெற்றிருக்கும் பசில் ராஜபக்ஷ, மேற்குலகுடனான உறவுகளைச் சீரமைக்கக்கூடிய ஒருவராக மட்டுமன்றி, மோசமடைந்திருக்கும் நிதி, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக்கூடிய ஒருவராகவும் பார்க்கப்படுகின்றார். அமெரிக்காவில் ஒரு மாத காலம் தங்கியிருந்த அவர், கொழும்பு திரும்பி அமைச்சராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும் பதவியேற்றிருக்கும் நிலையில்தான் திருமலையை அமெரிக்காவுக்குக் கொடுப்பது குறித்த தகவல்கள் வெளிவந்திருக்கின்றது.

அதிகாரத்திலுள்ள ராஜபக்ஷக்களைப் பொறுத்தவரையில் கோட்டாபயவும், மஹிந்தவும் ஏதோ ஒரு வகையில் போர்க் குற்றங்களுடன் சம்பந்தப்பட்டவர்கள். அதனைவிட, சீனாவுடன் நெருக்கமானவர்கள் என அடையாளம் காணப்பட்டவர்கள். ஆனால், பஸில் ராஜபக்ஷ அவ்வாறானவர் அல்ல. மேற்குலகுடன் மட்டுமன்றி, இந்தியாவுடனும் நெருக்கமான உறவைக் கொண்டிருப்பவர். அந்த வகையில், இந்தியாவுடனும், சீனாவுடனுமான உறவுகளைச் சீராக்கக்கூடிய ஒருவராகவே பஸில் ராஜபக்ஷ அடையாளம் காணப்படுகின்றார். திருகோணமலை துறைமுகத்திற்கு அருகில் எண்ணெய் சுத்திகரிப்பு திட்டத்தை முன்னெடுக்கவே அமெரிக்க நிறுவனம் நல்லாட்சி அரசாங்கக் காலத்தில் திட்டமிடப்பட்டு அமெரிக்காவின் மிலேனிய உடன்படிக்கை பொதுஜன பெரமுன அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்ட சூழலிலேயே இலங்கையுடனான அமெரிக்க உறவும் பெரும் நெருக்கடிக்குள் நகர்ந்தது. அதனையடுத்தே, இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக அமெரிக்காவின் நகர்வுகள் அமைந்திருந்தன. இந்நிலையில்தான், திருகோணமலை துறைமுக உடன்படிக்கை தற்போது எட்டப்பட்டுள்ளது. இது மில்லேனிய உடன்டிபடிக்கைக்கு மாற்றானதாக அமையலாம் என்ற கருத்து அரசியல் ஆய்வாளர் ஒருவரால் முன்வைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை துறைமுக உடன்படிக்கை எனத் தகவல்களை வெளிப்படுத்தியுள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் அறிக்கையில், ‘இலங்கை அரசாங்கம் செய்துகொள்ள உத்தேசித்துள்ள உடன்படிக்கையானது ரணில் – மைத்திரி தலைமையிலான அரசாங்கம் செய்துகொள்ளவிருந்த எம்.சி.சி உடன்படிக்கையை விடப் பயங்கரமானது’ எனக் குறிப்பிட்டுள்ளமையும் கவனிக்கத்தக்கதது. இது அமெரிக்காவுடான உடன்படிக்கையாக இருந்தாலும், இந்தியா, ஜப்பான் ஆகியனவும் இதில் சம்பந்தப்பட்டிருப்பதாக தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி தெரிவித்துள்ளது.

திருகோணமலை துறைமுகத்தை 3000 மில்லியன் டொலர்களுக்கு அமெரிக்காவுக்கு ஐந்து வருட குத்தகை என்கிற அடிப்படையில் வழங்க இலங்கை அரசாங்கம் இணக்கம் வெளியிட்டிருப்பதாக அந்தத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சீனாவின் ஒரே சுற்று ஒரே பாதை முன்முயற்சிக்கு எதிராக அமெரிக்காவால் கட்டமைக்கப்பட்ட இந்தோ பசுபிக் தந்திரோபாயத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் உத்திகளில் ஒன்றாகவே திருகோணமலை துறைமுகத்தை அமெரிக்கா இலங்கை அரசாங்கத்திடம் இருந்து குத்தகைக்கு எடுக்கவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இந்த தகவலை தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த நிறுவனமொன்றினால் 3000 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுப் பெறுமதியாக இந்த உடன்படிக்கை செய்யப்படவுள்ளது என்று ஜூலை 12ஆம் திகதி வெளியிட்டுள்ள அறிக்கை ஊடாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளர் வசந்த பண்டார தெரிவித்திருந்தார். திருகோணமலை துறைமுகத்திற்கு அருகில் எண்ணெய் சுத்திகரிப்பு திட்டத்தை முன்னெடுக்கவே அமெரிக்க நிறுவனம் முன்வந்திருப்பதாகவும் அவ்அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெளியாகியுள்ள இந்தச் செய்தி சரியானதாக இருந்தால், அமெரிக்க இலங்கை இடையே 2019 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை சீராக்குவதற்காக இலங்கை அரசு முன்னெடுத்துள்ள முக்கிய நகர்வாக இது இருக்கும்.

இலங்கைக்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை சீரமைக்க இது உதவும் என்றாலும், இதன் மறுபக்கத்தில் மற்றொரு பிரச்சினையும் உள்ளது. அதாவது, ஈழத் தமிழர் விவகாரத்தை மேற்கு நாடுகள் கைவிட்டுவிடும் ஆபத்தும் இதன் பின்னணியில் உள்ளது.







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# எத்தனை கோடி இன்பம் வைத்தாய் 08

கலாசூரி
திவ்யா சுஜேன் (இலங்கை)

தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார் இங்கு அமரர் சிறப்பு கண்டார் என்ற ஐயன் பாரதியின் வரிகளை மீண்டும் மீண்டும் சொல்லிப் பார்க்கும் போதே அமர நிலை எய்தி விடுவேனோ ? என்று எண்ணுகையில் தமிழின் மீது உயிர் காதல் பூக்கிறது. அந்த வேகம் உயிரினும் ழும் வேளை பாரதி தலைவனாவதும் தமிழ் முழக்கத்தின் தொனியே.

எமது முதல் மாணவியின் அரங்கேற்றம் 2010 ஆம் ஆண்டு நடைபெற்றதிலிருந்து இன்று வரை நடனப்பள்ளியின் படைப்புக்களுக்கு இயலாக்கம் செய்வது பாடல் இயற்றுவதென்றால் உள்ளத்தில் குதூகலம்.



இனிதெனக் கருதும் எம் அபிநய க்ஷேத்திரா நடனப்பள்ளி மாணவர்களுடன் பகிர்ந்து சுவைக்கும் பொற்கணங்களை மடையெனத் தந்தது. நாட்டியத்தை நாம் நோக்கும் பார்வை சற்று தனித்துவமானதும் பேரழுகு கொண்டதும் என நன்கு அறிவோம். ஆதலால் மாணவர்களுடன் நாட்டியத்தின் பல விரிவுகளுக்குள் நம் உரையாடல்கள் இருப்பதோடு ரூமி, ஓஷோ, புத்தர்,ரமணர் எனப் பல உண்மை விளக்கங்களை பேசி மகிகாரணம் தமிழ் சுவை நுகர்வதன்றிப் பிறிதில்லை, ஏனெனில் நான் கவிஞனும் இல்லை. தமிழாழிக்குள் துள்ளி விளையாடும் சிற்றலைத் துளியேனும் என்மீது மோதியதா எனவும் அறிகிலேன்.

கதிர்காம கந்தன் மீதான முதல் பாடல் 2010 இல் எழுதிய போது கம்பவாரிதி ஜெயராஜ் ஐயா அகமகிழ்ந்து வழங்கிய பொன்வாழ்த்துக்களின் பயன், பத்தாண்டுகளின் பின்பு மகா கவி பாரதியின் வம்சத்தில் அவர் கொள்ளு பெயரன் ராஜ்குமார் பாரதி ஐயா என் எழுத்துக்கு இசை அமைத்துத் தருமளவு இன்பபுரிக்கு அழைத்துச் சென்றது.

> "சிருங்கார நயனம் காருண்ய
> வதனம் சுபாங்க லலிதம்
> ஆனந்த சலிதம் "
> என்று மேல்மருவத்தூர்
> அம்மன் மீதும்,
> " திண்ணபுரத்திலாடும்
> திகாம்பரம் தில்லை கூத்தன்
> சித்தத்துள் வந்தாரடி - மனமே
> பித்தம் கொண்டாடுதடி."

என்று காரைநகர் சிவன் கோவில் மீது சிந்துப் பாடலும் அரங்கேற்ற நிகழ்வுகளில் மேடையேற்றப்பட்ட போது பக்தர்களின் அன்பை ஈட்டித்த தந்தது. கம்பனின் சுவையறியாதோர்

## நான் கவிஞனும் இல்லை

மணிவாசகர் சொல்லுக்கும் உருகார் என்று எண்ணுபவள், அன்றொரு நாள் நள்ளிரவில் குளிர் நிலவில் சீதையின் கோலம் கண்டேன். அப்போது சில சொற்கள் தாமாக வந்து சாமரம் வீசிக் கொண்டிருந்தது. கைது செய்தேன்.

> " மயில் இயல் குயில் மொழியாள்
> துயில் இல்லாள் அயில் விழியாள்"

என ஆரம்பிக்கும் சில வரிகளை தில்லானாவாக வடிவமைத்து வாரித் தந்தார் ராஜ்குமார் பாரதி ஐயா.

இதே போல இவர் இசையமைப்பில் என் இயல் நுழைய பல்வேறு நடன உருப்படிகள் மடையருளென அமைந்தன. அதில் "திடமாயுறைகிறான் திருக்கேதீஸ்வரத்தான்" என்ற திருக்கேதீஸ்வரத்தின் ஸ்தல புராண நாட்டிய நாடகத்திற்கான இயலாக்கம் அவரது முன்னிலையிலேயே எழுதிக் களித்திருந்தேன்.

**நாட்டிய நாடக இயலாக்க வரிசையில்**

> " மனமே சென்றிடு நம் வீடு
> மாய உலகிது நமக்கேது?"
>
> "காற்றிலா ஒளியிடை தீப சுடர் போல்
> மாற்றிலா மனத்திடை மருந்தவன்"
>
> "கதையல்ல கவியல்ல பரமானந்தம்
> மொழித்தோற்கும் விழியெங்கும்
> மெய்யானந்தம் "

என 2012 இல் 90 நிமிடங்களும் சுவாமி விவேகானந்த சரிதம் நாட்டிய நாடகத்தில் அத்வைதப் பொருளை அணுகிட தமிழ் என்மீது கருணை கொண்டது.

2013இல் அரன் புகழ் பாடும் அருமறை என்ற நாட்டிய நாடகத்தில் நம் பக்தி இலக்கியத் தமிழினை தழுவி அணைத்தேன், 2014 இல் ஒவ்வையார் நாட்டிய நாடகத்தில் சங்கத் தமிழோடு உறவு கொண்டேன். 2016 இல் ராவண காவியமாக "தசக்ரீவன்" நாட்டிய நாடகத்தில் இலக்கிய தமிழோடு கலந்து நின்றேன்.

2015 இல் ராஜ யோகாவின் படிகளை உள்வாங்கி ஒரு வர்ணம் அமைக்கும் பணி கிட்டியது. என்னகத்து நின்றாடும் சிவனை உருகி உருகி உணர்ந்து திருவாசகத்துள் தோய்ந்து எழுந்து ஆக்கியதும், 2021 இல் மீண்டும் நடராஜ தத்துவ வர்ணம் ஆக்கியதும் அவனருளன்றிப் பிறிதில்லை சீரடி சாயியின் சத்சரிதத்தின் ஒவ்வொரு சொல்லும் சாயியின் அருளாகி மலர்ந்ததவை. அம்மகானின் எளிமையான தோற்றத்தையும் எல்லை கடந்த வியப்பையும் தாங்கவல்ல தமிழ் மொழி எத்தனை விசாலமானது என்று அப்படைப்பினூடு உணர்ந்தேன் .தமிழ் தந்த மற்றொரு பரிசு லால்குடி புதுசு கிருஷ்ணன் ஐயாவின் இசை.

அபிநயக்ஷேத்திரா நடனப்பள்ளி மாணவிகளின் தமிழ் ஆர்வத்திற்கு சான்று அவர்களின் அரங்கேற்ற மார்க்கம். "ஞால வெளியினிலே" முற்று முழுதான பாரதி பாடல்களை வைத்து உருவானது. "ஐம்பெரும் காப்பிய மார்க்கம்" , தமிழ் இலக்கிய மரபு மார்க்கம், இன்னும் பல தொடரும்.

26 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


Sari1
Sari1 Fashion House
Taunus StraBe 49, 60329 Frankfurt
Ph : 015219239663
பொன் உருக்குதல், தாலி கொடி செய்தல், காது குத்தல், பழைய நகைகளை
உடனுக்குடன் போலிஷ் செய்துகொள்ள, பழைய நகைகளை வாங்க விற்க மற்றும்
அனைத்து திருத்த வேலைகளுக்கும்
நாட வேண்டிய ஒரே இடம்
Sari1 Textile & Jewelry


New Asialand
உங்கள் அனைத்து மளிகை
தேவைகளுக்கும் ஒரே இடம்...
இந்த சலுகை
ஆகஸ்ட் 10 ஆம் திகதி
மட்டுமே!!!
– பசுமையான மரக்கறி வகைகள்
– உடன் கடல் உணவுகள்
– மளிகை பொருட்கள்
– உடன் ஆட்டு இறைச்சி
– பழவகைகள்
FREE!
€170,00க்கு மேல் மளிகை பொருட்கள்
வாங்கி 3 லிட்டர் பிரெஸ்டீஜ்
குக்கரை இலவசமாக பெறுங்கள்
Prestige
ANJAPPAR
SONA MASOORI RICE
www.newasialand.eu
015201954064
Taunus Straße 49, 60329 Frankfurt

# குண்டு வேடிப்புக்களும் கைதுகளும் நிறைந்த காலங்களில் நிம்மதியாக படிக்க மட்டுமல்ல காதலிக்கவும் முடியவில்லை

## மணிரத்தினத்தின் பாடல்கள்

தமிழ் திரைப்பட இயக்குனர்களில் மணிரத்தினத்திற்கென்று ஒரு தனித்துவம் இருக்கிறது. மணிரத்தினத்தின் தனித்துவ முத்திரை அவரது படங்களில் மிளிரும். மணிரத்தினத்தின் திரைப்படங்களின் தரம் பிற இயக்குனர்களின் திரைப்படங்களிலிருந்து வேறுபடுவதற்கு மிக முக்கிய காரணங்களில் ஒன்று, மணிரத்தினம் தெரிவு செய்யும் அதியுயர் தரம் வாய்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் குழு.

பாட்டெழுத வைரமுத்துவும் வாலியும், மெட்டமைக்க முன்னர் இளையராஜா பின்னர் ரஹ்மான், காட்சிப்படுத்த P.C.ஸ்ரீராம் இல்லாட்டி ரஜீவ் மேனன் என்று தமிழ் சினிமாவின் ஜாம்பாவான்களின் திறமைகளை ஒரு புள்ளியில் மையப்படுத்தும் ஆற்றல் தான் மணிரத்தினத்தின் தனித்துவம். மணிரத்தினம் இயக்கிய படங்களில் இடம்பெறும் பாடல்களை அவர் திரையில் காட்சிபடுத்தும் விதம் மிக மிக அழகாக இருக்கும், காலங்கள் கடந்தும் என்றும் நினைவில் இருக்கும். மணிரத்தினமும் வைரமுத்துவோடோ வாலியோடோ, இளையராஜாவோடோ ரஹ்மானோடோ, இணைந்து தயாரிக்கும் பாடல்களுக்கு ரஜீவ் P.C.ஸ்ரீராமோ ஒளி ஓவியம் வரையும் அற்புத கணங்கள் மணிரத்தினத்தின் திரைப்படப் பாடல் காட்சிகளாகத் தான் இருக்கும்.

வீடியோ டெக்கில் படம் பார்க்கும் போது கயளவ fast forward பண்ணியும் திரையரங்குகளில் பாடல்கள் வரும் போது தம்மடிக்கப் போயும் திரைப்படம் பார்த்த தமிழ் ரசிகர்களை, உட்கார வைத்து பாடல் காட்சிகளையும் ரசிக்க வைத்த பெருமை மணிரத்தினத்தின் படங்களில் வரும் பாடல்களிற்கே உரித்தாகும்.

மணிரத்னம் இயக்கிய படங்களில் இடம்பெற்ற பாடல்களில், இசை, பாடல்வரிகள் மற்றும் முக்கியமாக காட்சிப்படுத்திய விதம் என்பவற்றின் அடிப்படையில் எனக்கு அதிகம் விரும்பிய பாடல், தளபதி படத்தில் இடம்பெற்ற ராக்கம்மா கையத் தட்டு பாட்டு தான். தொண்ணூறுகளின் ஆரம்பத்தில், A/L படித்துக் கொண்டிருந்த பொழுதுகளில், கொழும்பு இந்துக் கல்லூரி நண்பர்களோடு கொம்பனித் தெரு நவா தியேட்டரில் தளபதி படம் பார்த்த ஞாபகம் இன்னும் நினைவில் நிற்கிறது. படத்தின் ஆரம்பத்திலேயே ராக்கம்மா கையத்தட்டு பாட்டு வரும். ராக்கம்மா பாட்டில் தலைவர் ரஜினிகாந்தின் ஆட்டம் சும்மா பட்டையை கிளப்பும்.










மணிரத்தினம் படத்தின் trademark களில் ஒன்றான இருட்டில் தான் அந்தப் பாட்டை P.C.ஸ்ரீராம் அழகாக காட்சிப் படுத்தியிருப்பார். ரஜினிகாந்தோடு இந்த பாட்டில் ஆடுவது சோனு வாலியா என்ற இந்தி நடிகை. மணிரத்தினத்தின் படங்களில் இந்தி நடிகைகள் தலையை காட்டிக் கொண்டேயிருப்பார்கள், அழகை ரசிக்க வேண்டும், ஆராய கூடாது என்று நமக்கு நாமே சாட்டு சொல்லி விட்டு மணியின் மணியான பாட்டை ரசிக்கத் தொடங்கிவிடுவோம்.

ராக்கம்மா கையத்தட்டு பாட்டு மிக மெதுவாக தொடங்கி, ரஜினியின் வேகத்தைப் போல பரபரவென எகிறி, கடைசியில் ஷோபனாவின் வருகையோடு மிதமாகி நிறைவடையும் ஒரு வித்தியாசமான இளையராஜா பாடல். வாலி எழுதிய இந்தப் பாடலில் ரஜினிகாந்தின் ஆட்டமும் ஒரு தனிச் சிறப்பு தான். பாட்டு முழுக்க இடுப்பை முன்னுக்கும் பின்னுக்கும் ஆட்டுவதும், இடமும் வலமுமாக ஆட்டுவதும் தான் ரஜினிகாந்திற்கு கொடுக்கப்பட்ட dance steps.

பாட்டின் இறுதியில் வரும் 'குனிந்த புருவமும் கொவ்வைச் செவ்வாயும்' எனும் வரிகள், கவிஞர் வாலி நடிகை ஷோபனாவை வர்ணிக்க எழுதிய அழகிய கவிதை என்று கன காலம் நினைத்துக் கொண்டிருந்த முட்டாள்தனமான இளமைக்காலத்தை நினைவுறுத்தும் பாட்டு, ராக்கம்மா கையைத்ததட்டு.

பாட்டில் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கும் விரல் சொடுக்கும் சத்தம், பாடலின் இறுதியில் ஷோபனா தனது தோழியரொடு சிவலிங்கத்தை சுற்றி பரதம் ஆடும் போதும் மீண்டும் ஒலிப்பதும், ஆடிக்கொண்டே விழிகளால் ரஜினிகாந்தை தேடும் ஷோபனா, பார்வையாலே அவரை கவர்வதும், காதல் வயப்படும் தலைவர் சொக்கிப் போய் நிற்பதும். அழகு, மிக மிக அழகு.



ஜூட் பிரகாஷ்
(அவுஸ்திரேலியா)

காதலில் விழுந்திருந்த தொண்ணூறுகளின் மத்தியில் மணிரத்தினத்தின் பம்பாய் திரைப்படம், தெஹிவளை கொன்கோர்ட் திரையரங்கில் CIMA நண்பர்களோடு பார்த்த ஞாபகம். இளையராஜாவோடு உறவை முறித்துக் கொண்டதால், மணிரத்னம் கண்டெடுத்த மாணிக்கம் ரஹ்மானோடு இணைந்த மூன்றாவது படம் தான் பம்பாய். பம்பாய் படம் எடுத்துக் கொண்ட கரு கொதிக்கும் தணல், அதை ஆற்றத் தான் என்னவோ பாடல்கள் எல்லாம் மனதை ஆற்ற வைக்கும் விதமாக இதமாக இருந்தன.

''கண்ணாளனே'' பாட்டே திறமாக இருந்தது என்றால், உயிரே உயிரே பாட்டு உண்மையிலேயே வேற range தமிழ் திரையுலக வரலாற்றில் காட்சிப் படுத்தப்பட்ட மிகச் சிறந்த பாடல்களில் உயிரே உயிரே பாட்டு முதல் மூன்று இடங்களில் நிட்சயம் இடம்பிடிக்கும். காதலனை காக்க வைத்து விட்டு, ஓடி வரும் எல்லா காதலிகளைப் போலவே மனிஷா கொய்ராலாவும் இந்தப் பாட்டில் ஓடோடி வருவா. மனிஷா கொய்ராலா குலுங்க குலுங்க ஓடி வரும் காட்சியை பார்ப்பதற்காகவே இந்தப் பாடலை பல தடவை திரும்ப திரும்ப பார்த்த குறும்புக்கார நண்பனொருவன் இதை எழுதும் போது ஞாபகத்தில் வந்து தொலைத்தான்.

காதலித்து, கலியாணம் கட்டி, பிள்ளைகளும் பெத்தாப் பிறகு, மீண்டும் ஒருக்கா காதலித்த காலங்களிக்கு பயணிக்க ஆசைப்பட வைத்த பாடல் என்றால், மணிரத்தினத்தின் ஓகே கண்மணி படத்தில் வரும் மென்டல் மனதில் பாட்டு தான். மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு, துல்பிகாரும் நித்தியா மேனனும் ■

26 ஆம் பக்கம் பார்க்க...





# மாத்தி யோசி, வெற்றியை ருசி



சேவியர்
(தமிழ்நாடு)

நடுப்பக்கம்



'ஒரு கதவு அடைத்தால் ஒன்பது கதவு திறக்கும்' என்பார்கள். ஒரு கதவை மட்டுமே பார்த்துக் கொண்டிருக்கும் போது அங்கே வேறு ஒன்பது கதவுகள் இருப்பதே கூட நமக்குத் தெரிவதில்லை. வாழ்க்கையின் பெரும்பாலான விஷயங்களில் இது நடந்து விடுகிறது. எந்த ஒரு பிரச்சினைக்கும் விடையாக நமக்கு ஏற்கனவே தெரிந்த ஒரு தீர்வையே தேர்ந்தெடுக்கிறோம். ஒரு கட்டத்தில் அதுவே பழகிப் போக, 'இந்தப் பிரச்சினைக்கு இது மட்டும் தான் தீர்வு' என முடிவு கட்டி விடுகிறோம்.

துப்பறியும் நாவல்களைப் படிக்கும்போது நமக்கு ஆங்காங்கே மெல்லிய ஆச்சரியம் எழுவதற்கான காரணமும் அது தான். 'அடடா இது நமக்கு தோணாம போச்சே !' என்று கதாநாயகர்களைப் பாராட்டுகிறோம். தினசரி வாழ்க்கைப் பிரச்சினைகளானாலும் சரி, அலுவலகப் பிரச்சினைகளானாலும் சரி, வித்தியாசமாய் யோசித்து புதிது புதிதாய்த் தீர்வுகளைக் கண்டுபிடிப்பவர்களை வெற்றி தேடி வந்து அரவணைத்துக் கொள்ளும்.

வித்தியாசமாய் யோசிப்பவர்கள் தனித்துத் தெரிகிறார்கள். சாமந்திப் பூக்களின் தோட்டத்தில் ஒரு பூ மட்டும் நீல நிறமாய்த் தெரிந்தால் சட்டென கண்களை ஈர்த்து விடுவதைப் போல.

விண்வெளியில் காற்று இருக்காது என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். விண்வெளி வீரர்கள் சாதாரண பேனா கொண்டு போனால் பயன் இருக்காதாம். எனவே வெற்றிடத்தில் எழுதுவதற்குரிய ஸ்பெஷல் பேனாவைக் கண்டு பிடிக்க அமெரிக்கர்கள் பிரம்மப் பிரயத்தனம் செய்தார்கள். கடைசியில் பல கோடி ரூபாய்கள் செலவு செய்து வெற்றிகரமாக ஒரு பேனாவைக் கண்டு பிடித்தார்கள். ரஷ்யர்களுக்கும் இதே சிக்கல் வந்ததாம். அப்போது ரஷ்ய விண்வெளி ஊழியர் ஒருவர் சொன்னார்,''எதுக்குப் பேனா ? ஒரு பென்சில் கொண்டு போய் எழுதுவோமே!'' அவர்களுக்கு இரண்டு ரூபாயில் பிரச்சினை தீர்ந்தது !

''விண்வெளியில் வைத்து எழுதவேண்டும்'' என்பது தான் கொடுக்கப்படும் பிரச்சினை. அதற்குத் தீர்வு பல மில்லியன் டாலர் பேனாவாகவோ, இரண்டு ரூபாய் பென்சில் ஆகவோ இருக்கலாம். ஆனால் எது லாபகரமானது? எந்தச் சிந்தனை வலுவானது? எந்தச் சிந்தனை எளிதானது? எது வழக்கத்துக்கு மாறாகச் சிந்திக்கிறது? இவை தான் கவனிக்கப் பட வேண்டிய விஷயங்கள்.

ஒரு பெரிய சோப் தயாரிக்கும் நிறுவனத்துக்கு ஒரு புகார் வந்தது. ஒருவர் வாங்கிய சோப்களில் ஒரு கவருக்குள் சோப் இல்லை. வெறும்



கவர் மட்டுமே இருந்தது! நிறுவனத்துக்கு இதே போல அங்கொன்றும் இங்கொன்றுமாய்ப் புகார்கள் எழ, நிர்வாகம் இதற்கு ஒரு பரிகாரம் கண்டுப் பிடிக்க முயன்றது. கம்பெனியிலுள்ள பெரிய வல்லுனர்கள் எல்லாம் ஒரு அறையில் கூடி விவாதித்தார்கள். ஏகப்பட்ட ஐடியாக்கள் வந்தன.

சோப்கள் வரிசை வரிசையாக ஒரு பெல்ட் வழியாக ஊர்ந்து போய்க் கடைசியில் ஒரு இடத்தில் வந்து சேரும். அந்த இடத்துக்கு வந்து சேருவதற்கு முன் அந்தக் கவர்களிலெல்லாம் சோப் இருக்கிறதா என்பதைப் பரிசோதிக்க வேண்டும். சோப் இல்லையேல் அதை எடுத்துத் தனியே வைக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

சரி. கவருக்குள் சோப் இருக்கிறதா இல்லையா என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது? ஆளாளுக்கு ஒரு ஐடியா சொன்னார்கள். ஒருவர் சொன்னார். 'ஒரு எக்ஸ்ரேக் கருவியைப் பொருத்தலாம். அந்தக் கருவி ஒவ்வொரு சோப்பாக ஸ்கேன் செய்து உள்ளே சோப் இருக்கிறதா இல்லையா என்பதைக் காட்டி விடும். அப்புறம் ஒரு ரோபோ கையை வைத்து அந்த டப்பாவை எடுத்துத் தனியே வைக்கலாம் !


இன்னொருவர் சொன்னார். சோப் ஊர்ந்து போகும் இடத்தில் ஒரு சின்ன எடை மிஷின் ஒன்றை வைக்க வேண்டும். சோப் இல்லையென்றால் எடை குறைவாய் இருக்கும். அதை அப்புறப்படுத்தி விடலாம்

இப்படி ஆளாளுக்கு ஒரு யோசனை சொன்னார்கள். நீங்களாய் இருந்தால் இந்தச் சூழலில் என்ன பதில் சொல்வீர்கள் ? இதில் எது சிறந்த வழி ? அல்லது இதை விடச் சிறந்த எளிய வழி உண்டா ? இவை தான் இங்கே கேள்விகள். கூட்டத்திலிருந்த ஒருவர்

17 ஆம் பக்கம் பார்க்க...

S.K.SILKS GOLD PARAADISE
Adler Str 33 - 44137 Dortmund | Tel: 0231 9501 647
Mobil: 01705429251
Mr.P.Sritharan.
Proprietor

50 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



இராமநாதர் பரமானந்தம்
(நெடுந்தீவு)
இறப்பு: 08.08.1971 – திதி: 27.08.2021

எந்தன் உயிரில் கலந்த தெய்வமே
வந்தாரைக் கூப்பி வரவேற்கும் தந்தையே
உந்தன் செயலை உலகமே போற்றுகின்ற
சிந்தனை கூடிய சிறப்பு

உழன்றுமே வாழ்வை உசத்தித் தினமும்
சுழன்றுடும் பூமியிலே சேர்ந்திட்டும் வாழ
தழர்விலா நல்லறிவு தூய்மையுடன் எமக்குப்
பழக்கித் தந்தவர் பிதா

எம்மின் பிதாவையும் இழந்துமே நாங்களும்
வெம்பி வெதும்பி விரையமின்றி செம்மையாய்
நம் வாழ்வை அன்றாடம் நேர்மையுடன்
நகர்த்திய அம்மாவும் தெய்வமாகு மன்று

அரைநூற்றாண்டு கடந்தாலும் தந்தையின்
நினைப்புடன் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்
இந்திரா ,பத்மநாதன், பவானி
பத்மராணி, பாய்க்கியநாதன்




ஒரு அட்டகாசமான ஐடியா சொன்னார். சோப்கள் ஊர்ந்து வரும் இடத்தில் ஒரு பெரிய ஃபேனை வேகமாகச் சுழல விடுங்கள். ''சோப் இல்லாத கவர்களெல்லாம் தானே பறந்து போய்விடும். பறக்காத கவர்களிலெல்லாம் சோப் இருக்கிறது என்று அர்த்தம் !'' இது தான் அவருடைய ஐடியா! மிக எளிமையான, செலவில்லாத இந்த ஐடியா கரகோஷத்துடன் அங்கீகரிக்கப்பட்டது.

இதை ஆங்கிலத்தில் ''அவுட் ஆஃப் பாக்ஸ் திங்கிங்'' என்பார்கள். அதாவது வழக்கமாக மக்கள் யோசிப்பது போல யோசிக்காமல் கொஞ்சம் வித்தியாசமாய் யோசிப்பது. லேட்டரல் திங்கிங் என்றொரு சமாச்சாரமும் உண்டு. அதுவும் ஏறக்குறைய இதே அடிப்படையிலானது தான். ஒரு பிரச்சினைக்குத் தீர்வாக வழக்கமாக உள்ள வழிகளையோ, சட்டெனப் புலப்படும் வழிகளையோ விட்டு விட்டு வேறு புதுமையான வழிகளை யோசிப்பது தான் இரண்டுக்குமான அடிப்படை. ஒரு சின்ன வித்தியாசமான ஐடியா போதும் ஒரு நிறுவனம் உச்சிக்குப் போக ! ஐபேட், ஐபோன் போன்றவற்றின் வருகைக்குப் பின் ஆப்பிள் நிறுவனம் அடைந்திருக்கும் பிரமிப்பூட்டும் வளர்ச்சி நாம் அறிந்ததே.

ஐடியாக்களைக் கண்டுபிடிக்க செலவு ஏதும் இல்லை. மூளையைக் கசக்க வேண்டும் அவ்வளவு தான். பெரிய பெரிய கண்டுபிடிப்புகளெல்லாமே சின்னச் சின்ன ஐடியாவின் நீட்சிகள் தான். ஒரு காலத்தில் தீக்குச்சியும், அதை உரசி நெருப்பு பற்ற வைக்கும் மருந்தும் தனித்தனியே இருந்தன. பெட்டிக்குள் குச்சியைப் போட்டு, அதன் பக்கவாட்டில் மருந்து தடவி உரச வைக்கலாம் என்பது ஒரு சின்ன ஐடியா தான். ஆனால் எவ்வளவு அட்டகாசமான ஐடியா இல்லையா ?

எட்வர்ட் டி பானோ என்பவர் லேட்டரல் திங்கிங் விஷயத்தில் புலி. இவர் எழுதிய 40 நூல்கள் இருபத்து ஐந்து மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. இவருடைய பார்வையில், அறிவும் சிந்தனையும் வேறு வேறு. வித்தியாசமானச் சிந்தனையை யார் வேண்டுமானாலும் பயிற்சியின் மூலமாக உருவாக்கலாம். ஏன்? எப்படி ? எனும் கேள்விகளைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தால் போதுமாம்.

இன்னொரு விதமாகச் சொன்னால், லேட்டரல் திங்கிங் என்பது ஒரு விஷயத்தை பலருடைய பார்வையில் பல கோணங்களில் யோசிப்பது. உதாரணமாக வீடு கட்டுகிறீர்கள் என வைத்துக் கொள்ளுங்கள். படுக்கையறை நல்ல வெளிச்சமாய் இருக்க வேண்டும் என்பது உங்கள் விருப்பம்.

எலக்ட்ரீஷியன் ''நிறைய லைட் போடலாம்'' என்பார். கார்ப்பெண்டரோ, ''ரூம் சன்னலைப் பெரிசு பெருசாக வைக்கலாம் ?'' என்பார். ''பளிச் நிறத்தில் பெயிண்ட் அடித்தால் வீடு வெளிச்சமாய்த் தெரியும்.'' என்பது பெயிண்டரின் பார்வையாய் இருக்கும். டிசைனரோ ''இரவிலும் ஒளிரும் ஸ்டிக்கர் ஒட்டலாம், நிறைய கண்ணாடி பொருத்தலாம்'' என்பார். வாஸ்துக்காரர் ஒருவேளை ''பெட்ரூமை கிழக்குப் பக்கம் பார்க்கிறமாதிரி வையுங்க'' என்பார். இப்படி எழும் பலருடைய கோணத்தை நீங்கள் ஒருவரே யோசித்துச் சொன்னால் உங்கள் சிந்தனை வளர்ச்சியடைகிறது என்று பொருள்.

வாழ்க்கை எந்த அளவுக்கு போட்டிகளும், சவால்களும் நிறைந்ததோ அந்த அளவுக்கு வாய்ப்புகளும், வரவேற்புகளும் நிரம்பியது. உங்களுடைய சிந்தனை கூர்தீட்டப்பட்டதாக இருந்தால் பாதைகளில் சிவப்புக் கம்பளம் நிச்சயம் உண்டு. வந்தோமா, போனோமா என்றிருக்காமல் தினசரி செய்யும் வேலைகளில் என்னென்ன மாற்றங்கள் செய்யலாம் ? என்ன புதுமைகள் புகுத்தலாம் என யோசித்துக் கொண்டே இருங்கள். ஆச்சரியமூட்டும் உயரிய இருக்கைகள் உங்களுக்கு இடமளிக்கும்.



**கூரான சிந்தனைகள் கருவாகட்டும்**
**எதிர்காலம் வளமாக உருவாகட்டும்**

**கட்டுரைக்கான ஒரு கதை :**

ஒரு கோடீஸ்வரர் இருந்தார். அவருக்குப் பயங்கரமான கண் வலி. அவருடைய வலியைப் போக்க வழி தெரியாமல் எல்லா மருத்துவர்களும் கையைப் பிசைந்தார்கள். கடைசியில் ஒரு துறவியைக் கூட்டி வந்தார்கள். அவர் உங்கக் கண்ணுக்கு நிற அலர்ஜி வந்திருக்கிறது. இன்னும் ஒரு மாசத்துக்குப் பச்சை நிறங்களை மட்டும் பாருங்க. மற்ற நிறங்களைப் பார்க்காதீங்க என்றார் இவர் கோடீஸ்வரரல்லவா ? வீடு, படுக்கை துணிகள் எல்லாமே பச்சை கலராய் மாற்றப்பட்டன. பச்சை உடை, பச்சை முகமூடி இல்லாமல் யாரும் அவரை நெருங்க முடியவில்லை.

ஒரு மாதம் கழிந்து துறவி வந்தார். அவர் மீதே பச்சை பெயிண்டைக் கொட்டினார்கள். துறவி அதிர்ச்சியடைந்தார். கோடீஸ்வரரோ, மன்னியுங்கள் உங்க உடை காவி நிறம். அதனால் தான் பச்சை பெயிண்ட் கொட்டச் சொன்னேன். என்று சமாதானப்படுத்தினார் . துறவி வாய்விட்டுச் சிரித்தார். இவ்வளவு களேபரத்துக்குப் பதிலா நீங்க மட்டும் ஒரு பச்சைக் கலர்க் கண்ணாடி வாங்கி கண்ணுல மாட்டியிருந்தா போதுமே ! என்றார் !

இது தான் எளிய, அதே நேரம் வலிமையான சிந்தனை. எந்த ஒரு செயலைச் செய்யவும் பல வழிகள் இருக்கும். நமக்கு ரொம்பவேப் பரிச்சயமான வழியில் நடப்பதைத்தான் நாம் விரும்புவோம். ஆனால் அந்த வழியை விட்டு விட்டு இன்னொரு வழியில் நடக்கும் போது தான் புதுமைகளைக் கண்டடைய முடியும். ■

## குட்டி Story

# இப்படித்தான் சில முடிவுகள்

*அவள் முடிவு எடுத்துவிட்டாள். ஒரு வாரமா யோசிச்சு கடைசியில் இதுதான் முடிவு என்று முடிவெடுத்தாள். இப்போ மனம் லேசாக படுத்தாள், நித்திரையும் உடனேயே வந்தது. மறுநாள், தெளிந்த மனத்துடன் எழும்பியும் விட்டாள். அம்மா சரசக்கா வந்து இருக்கிறா என்றார். போய் சரசக்காவுடன் கதைக்கத் தொடங்கியதும், சரசக்கா 'என்ன பிள்ளை முடிவு எடுத்தாச்சோ' என்றார். இவளும் சொன்னாள். 'என்னமோ பிள்ளை யோசி' எண்டு ஒரு பரிதாபப் பார்வை பார்த்துச் சென்றார். பாவம் இவள் மீண்டும் யோசிக்கத் தொடங்கினாள்... இனி முடிவு!*



**தமிழினி பாலசுந்தரி (நியூஸ்லாந்து)**








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.





# யேர்மனி எங்கும் கோரோனா தளர்ச்சி ஆலயங்கள் தோறும் அரோகரா எழுச்சி!!!

## யேர்மனியில் கொரோனா கட்டுப்பாடு தளர்வு!; கம் நகரில் காமாட்சி அம்மன் தேரில் பவனி!







யேர்மனியில் கம் நகரத்தில் காமாட்சி அம்மன் ஆலயத்தில் வருடாந்த உற்சவம் சிறப்பாக நடைபெற்றது. தேர்த் திருவிழா 11.07.2021 ஞாயிற்றுக்கிழமை அரச விதிகளுக்கு அமைய பதிவுசெய்து அனுமதிக்கப்பட்ட அடியார்கள் பலர் கலந்து கொண்டனர். 1000 பேருக்கு அரசினால் அனுமதி வழங்கப்பட்டது. மறுநாள் தீர்த்தோற்சவம் ஆலயம் அருகில் உள்ள ஆற்றங்கரையில் இடம்பெற்றது.

தேர் தீர்த்தம் என ஆலய பூசைகள் அனைத்தையும் ஆலய ஆதின கர்த்தா சிவஸ்ரீ பாஸ்க்கரகுருக்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. ஐரோப்பாவில் இருந்து வருடாந்த உற்சவத்தில் 20,000 க்கு மேல் கலந்து கொள்ளும் இவ்வாலயம் கொரோனா தொற்று சூழலினால் மட்டுப்படுத்தப்பட்ட மக்களே கலந்து கொண்டனர். இருந்தாலும் கொரோன கால கட்டுப்பாடு யேர்மனியில் தளர்த்தப்பட்டதால் அரோகரா ஒலி மீண்டும் யேர்மனியில் ஒலிக் வழிபிறந்துள்ளது. அடியவர்கள் கலந்து கொண்ட இரதபவனிக் காட்சிகளையும், அதில் சகநாயகன் சக்திவேல் kaneen Tv மூலம் நேரடி வர்ணனை செய்வதையும் படத்தில் காணலாம்.



**படங்கள்: ஆன்மீகத்தென்றல் த.புவனேந்திரன், நந்தா போட்டோஸ்**



Kaneen.de

## ஸ்ரீ நாகபூசணி அம்பாள் அலங்கார உற்ஷவம்





கிறீவெல்ட்நகரில், பசுமைநிறைந்த சூழலில் அடியார்களின் நல்விருப்பங்களை நிறைவேற்றும் அன்புத்தாயான ஸ்ரீ நாகபூசணி அம்பாளுக்கு, இவ்வருடமும் ஆனிமாதம் 27ம் திகதி [27.06.2021 ] மிகவும் சிறப்பாக அலங்கார உற்ஷவம் இனிதே நிறைவடைந்தது. இத்திருவிழாவில் இருந்து சில காட்சிகள்.



## மணி விழாக்காணும் யாழ். நூலக நூலகர்

## திருமதி சுகந்தினி சதாசிவமூர்த்தி

**திருமதி சுகந்தினி சதாசிவமூர்த்தி ( நூலகர் தரம் i ) கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக நூலக சேவையில் கால் பதித்து, யாழ். பொதுசன நூலகத்தில் கடந்த ஏழு வருடங்களாக சிறப்புடன் பணியாற்றி ஜூலை மாதம் (15.07.2021) ஓய்வு பெற்றுச் சென்ற பிரதம நூலகர் திருமதி சுகந்தினி சதாசிவமூர்த்தி அவர்களை வெற்றிமணி பத்திரிகைக் குடும்பத்தின் சார்பில் இந்நாளில் மனதார வாழ்த்துகிறோம்.**

**என்றும் தமிழுடன். மு.க.சு.சிவகுமாரன்**




# உலகில் உள்ள அனைத்து அணுகுண்டுகளும் ஒரே நேரத்தில் வெடித்தால் என்ன நடக்கும்?

அணுகுண்டு மிகவும் பயங்கரமான ஒரு ஆயுதம் என்பது எல்லோருக்குமே தெரிந்த விஷயம் ஆகும். குறிப்பாக அமெரிக்க இராணுவத்தால் 1945ம் ஆண்டில் அணுகுண்டால் தாக்கப்பட்ட ஹிரோஷிமா மற்றும் நகசாக்கி ஆகிய நகரங்களில் ஏற்பட்ட சேதம் மிகவும் விபரீதமானது. 100.000கும் மேற்பட்டோர் உடனடியாக இறந்துவிட்டனர். தொடர்ந்து அதன் விளைவாக மேலும் 130.000கும் மேற்பட்டோர் இறந்தனர். ஒரு சில அணுகுண்டுகள் வெடித்தாலே இவ்வளவு சேதம் ஏற்படுகின்றதே, இதுவே இந்த உலகில் காணப்படும் அனைத்து அணுகுண்டுகளும் ஒரே நேரத்தில் வெடித்தால் என்ன நடக்கும் தெரியுமா?

நமது பூமியில் தற்போது சுமார் 15.000 அணு ஆயுதங்கள் உள்ளன. அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகள் மட்டுமே சுமார் 7.000 அணுகுண்டுகளை தமதாக்கிவைத்திருக்கின்றனர். இவற்றைத் தொடர்ந்து பிரான்ஸ், சீனா, இங்கிலாந்து, பாகிஸ்தான், இந்தியா, இஸ்ரேல் மற்றும் வட கொரியா ஆகிய நாடுகளுக்கிடையே சுமார் 1.000 அணுகுண்டுகள் உள்ளன. ஆனால் 15.000 அணுகுண்டுகளுக்குள் மறைந்திருக்கும் அழிக்கும் சக்தி எவ்வளவு தெரியுமா?

அதற்கு முதலில் நமது உலகில் எத்தனை நகரங்கள் உள்ளன என்பதைப் பார்ப்போம். குறிப்பாக 100.000கும் மேற்பட்ட மக்கள்தொகையைக் கொண்ட நகரங்களை மட்டும் எடுத்துக்கொண்டால் சுமார் 4.500 நகரங்கள் உள்ளன. சில பெரியவை, வேறு சில சிறியவை எனவே ஒரு நகரத்தை முற்றிலும் அழிக்க சராசரியாக மூன்று அணுகுண்டுகள் தேவை என்று எடுத்துக்கொள்வோம். எனவே 4500 நகரங்களை அழிக்க 13.500 அணுகுண்டுகள் தேவைப்படுகின்றது. அத்துடன் அந்த நகரங்களில் வாழும் சுமார் 300 கோடி மக்களும் ஒரே நொடியில் இறந்துவிடுவன. இதில் ஆச்சரியம்



ஊட்டும் விஷயம் என்னவென்றால், இவ்வள்வு பெரிய அழிவை செய்தாலும், உலகில் மீதீயாக 1.500 அணு ஆயுதங்கள் உள்ளன என்பது தான்.

இதை இனி வேறொரு கோணத்தில் இருந்து பார்ப்போம். ஒவ்வொரு நகரமாக தாக்காமல், 15.000 குண்டுகளையும் ஒரு பெரிய குவியலாக சேர்த்து தென் அமெரிகாவில் காணப்படும் அமேசான் மழைக்காட்டில் ஒரே நேரத்தில் வெடிக்க வைத்தால் என்ன நடக்கும்? ஒரு சராசரி அணுகுண்டின் அழிக்கும் சக்தி 200.000 டன் டி.என்.டியின் (T.N.T.) சக்திக்கு சமமாக இருக்கும். எனவே 15.000 அணுகுண்டுகள் சுமார் 300 கோடி டன் டி.என்.டி கு சமமாக இருக்கும். இதைக் கொஞ்சம் புரியும் படி சொல்லவேண்டும் என்றால், இந்த அழிக்கும் சக்தியை ஒரு எரிமலையுடன் ஒப்பிட்டால் மட்டுமே முடியும். வரலாற்றில் கொடிய எரிமலை வெடிப்புகளில் ஒன்று 1883ம் ஆண்டில் கிரகடோவா தீவில் நடைபெற்றது. அந்த மிகவும் சக்தி வாய்ந்த வெடிப்பு, தீவின் சுமார் 70% நிலப்பரப்பையும் மேலும் சுற்றியுள்ள தீவுக்கூட்டத்தையும் அழித்துவிட்டது. இதனால் பல்லாயிரக்கணக்கான மக்களும் கொல்லப்பட்டன. மேலும் இதன் விளைவுகள் சுனாமி போன்ற பலவிதமான வேடங்களில் உலகம் பூராக உணரப்பட்டது. இதில் உள்ள பயங்கரமான விஷயம் என்னவென்றால், நாம் கற்பனையில் அமேசான் மழைக்காட்டில் குவித்து வைத்திருக்கும் அணுகுண்டுகளின் அழிக்கும் சக்தி, இந்த எரிமலையின் அழிக்கும் சக்தியை விட 15 மடங்கு அதிகமானது என்பது தான். எனவே இது அனைத்தும் வெடித்தால் என்ன நடக்கும் என்பதைப் பார்ப்போமா?



**Dr.நிரோஷன் தில்லைநாதன்**
(யேர்மனி)

## 3... 2... 1... பூம்!!!

வெடித்து அடுத்த நொடியில் ஒரு நெருப்பு பந்து சுமார் 3.000 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட தேசத்தை உடனடியாக அழித்துவிடும். 250 கி.மீ. சுற்றுவட்டாரத்தில் காணப்படும் அனைத்து உயிரினங்களும் எரியத் தொடங்கிவிடும். இந்த மாபெரும் வெடிப்பு உலகம் முழுவதும் கேட்கப்படும். மில்லியன் டன் கணக்கான எரிக்கப்பட்ட பொருள்கள் வளிமண்டலத்தை நோக்கிப் பறக்கும். இதைத் தொடர்ந்து சரித்திரம் காணாத விதமாகத் தென் அமெரிக்கா முழுவதும் காடுகளும் நகரங்களும் தீயில் மூழ்கிப் போகும். அட இத்துடன் எல்லாம் முடிந்து போகாது. இனித் தான் பிரச்சனையே ஆரம்பிக்கின்றது.

இந்த மாபெரும் அணுகுண்டு வெடிப்பால் கதிரியக்கப் பொருள்கள் (radioactive material) பரவிச் சுற்றியிருக்கும் உயிரினங்களை மிக விரைவாகக் கொல்லும், மேலும் பல கிலோமீட்டர் சுற்றுவட்டாரத்தில் உள்ள பெரிய பகுதி மட்டுமில்லாமல், காற்று வீசும் திசையில் இருக்கும் நூற்றுக் கணக்கான கிலோமீட்டர் தூரத்தில் காணப்படும் பிரதேசம் முழுவதும் வசிக்க முடியாத நிலைக்கு மாறிவிடும். இதில் உள்ள பயங்கரமான விஷயம் என்னவென்றால், உயிரினங்களுக்கு மிகவும் ஆபத்தான இந்த கதிரியக்கப் பொருள்கள் காற்று மண்டலத்தில் கலந்து உலகெங்கும் பரவி புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பை தீவிரமாக அதிகரிக்கும். இதன் விளைவாகத் தொடர்ந்து உலகெங்கும் அணுப்போர் கார்காலம் என்று அழைக்கப்படும் Nuclear Winter ஆரம்பித்து உலக வெப்பநிலையை ஒரு சில டிகிரி செல்சியசுக்கு குறைக்கக்கூடும்.

நண்பர்களே, ஒரு அணுகுண்டு வெடித்தால் என்ன, 15.000 அணுகுண்டுகள் வெடித்தால் என்ன, அதன் விளைவு பயங்கரம் என்பதில் சந்தேகமே இல்லை. எனவே நாம் வாழும் இந்த உலகில் இனி ஒரு போதுமே இந்த கொடிய ஆயுதம் பயன்படுத்தக் கூடாது என்று நம்புவோம். இனி நீங்கள் கூறுங்கள்! அணுகுண்டு இந்த உலகத்துக்குத் தேவையான ஒரு ஆயுதமா? இதற்குரிய பதிலை மட்டும் இல்லை, எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh)






நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்

# Jaffna Bazar Jewellery




தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்

2021 ஆண்டுக்கான புத்தம் புது டிசைன்கள், கலைநயம் மிளிரும் தரமான தங்க நகைகள் எம் கையிருப்பில்.



திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.

பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்



ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு

உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக
மலிவாகக்கிடைக்கும்

Jaffna Bazar

Jaffna Bazar, Kaiser Straße.49
69329 Frankfurt Main




Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425



# 'நோர்வேயின் கூரை'

## நோர்வேயில் அமைந்துள்ள (வட ஐரோப்பாவின்) மிக உயரமான மலை: ஒரு பயண அனுபவம்!

ரூபன் சிவராஜா
(நோர்வே)

Galdhøpiggen என்பது ஒரு மலையின் பெயர். இது நோர்வேயின் மட்டுமல்ல வட ஐரோப்பாவினதும் மிக உயரமான மலை. கடல் மட்டத்திலிருந்து 2469 மீற்றர் உயரம். இம்மலை உச்சிக்கு ஏறுவதற்கான பயணம் ஒன்றினை ஜூன் இறுதியின் வார இறுதியில் மேற்கொண்டிருந்தோம். இந்த மலையானது தென்–நோர்வேயின் மத்திய பகுதியினை அமைவிடமாகக் கொண்ட Jotunheimen பிரதேசத்தில் உள்ளது. ஒஸ்லோவிலிருந்து கிட்டத்தட்ட 400 கி.மீற்றர் தூரம். 5 மணிநேர கார்ப் பயணம். 3500 சதுர கி.மி பரப்பளவைக் கொண்ட Jotunheimen, பெருமலைகளாலால் சூழப்பட்ட பிரதேசம். திடகாத்திரமான கற்களையும் கற்பாறைகளையும் பனிப்பாறைகளையும் கொண்ட பரந்த நிலத்தோற்றமுடையது.

மலை உச்சியை நாம் அடைந்த போது மேகத்திரள் விலக்கிச் சூரியன் தன்முகம் காட்டிய கணங்கள் மிகச் சொற்ப நிமிடங்களே. அந்தச் சில நொடிகளில் உச்சிமலையிலிருந்தபடி வானப் பெருவெளியை, அதன் நீலத்தை, கூர்முனைகளையுடைய மலை உச்சிகளை, பனிபடர்ந்ததும் பனி நீங்கியதுமான மலைத் தொடர்கள், பனிப்பாறைகள் என Jotunheimen பிரதேசம் முழுவதையும் ஒரு அகலப்பரப்புக் காட்சியாகக் [Panoramic view] காணக்கிட்டியது. உயர்ந்த கருமை படிந்த அந்த மலை பிரமிடு வடிவத்தில் காட்சியளிக்கிறது.

மலைப் பயணத்திற்கு முதல் நாளே ஒஸ்லோவிலிருந்து சென்று அப்பிரதேசத்திலுள்ள 'Juvasshytta' என்ற ஓய்வுவிடுதியில் தங்கினோம். இந்த ஓய்வுவிடுதியின் அமைவிடம் மிக உயரமானது. கடல்மட்டத்திலிருந்து 1850 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ளது. ஒடுக்கமான பாதையெனினும காரில் அங்கு செல்லமுடியும். பாதையின் இருமருங்கிலும் கட்டுகள் ஏதும் இல்லை. மிக அவதானமாகவும் மெதுவாகவும் வாகனத்தைச் செலுத்தவேண்டும். கரணம் தப்பினால் மரணம் என்பது போல, சற்றுத் தடம் தவறினால் பாதையின் இரு மருங்கும் பெரும் பள்ளத்தாக்குகள். மரங்களற்ற பெருவெளியில், மலைகளுக்கு நடுவில் இவ்விடுதி அமைந்துள்ளது. Galhøpiggen செல்பவர்ளில் பெரும்பாலானவர்கள், குறிப்பாக தூர இடங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் செல்வோர் இவ்விடுதியில் தங்கியே மலைக்கான நடைபயணத்தினை மேற்கொள்கின்றனர்.



அனைவரும் கயிற்றினால் ஒருவருடன் ஒருவர் பிணைக்கப்பட்ட நிலையில் நடக்க வேண்டும்.



விபத்துகள் நடந்து யாரேனும் பாறைவெடிப்பினூடு கீழே விழநேர்ந்தால் அவரை ஏனையவர்கள் கூட்டுப்பலத்துடன் வெளியில் தூக்கி எடுப்பதற்கானதே கயிற்றினால் அனைவரும் பிணைக்கப்படுவதற்கான முதன்மைக்காரணம்.

இவ்விடுதியிலிருந்து நோர்வேயின் கூரை' என்றும் அழைக்கப்படுகின்ற Galhøpiggen மலையின் உயரம் கிட்டத்தட்ட 600 மீற்றர்கள் மட்டுமே. ஆயினும் இந்த 600 மீற்றர் உயரத்தை அடைவதற்கான நடைபயணம் 6 கிலோ மீற்றர் தூரத்தினைக் கொண்டுள்ளது. சென்றுதிரும்புவதற்கான மொத்தத் தூரம் 12 கிலோ மீற்றர். உச்சிக்குச் சென்று திரும்புவதற்கு மொத்தமாகத் தேவையான நேரம் 6 – 7 மணித்தியாலங்கள். முழுமையான ஒரு பகற்பொழுதைக் கோருகின்ற பயணம் இது.

முதலில் கற்பாறைகள் நிறைந்த பரந்த வெளியில் கிட்டத்தட்ட இரண்டு கி.மி தூரமும் – இரண்டாவது கட்டமாக பனிப்பாறைகளின் ஊடான 3 கி.மீ தூரமும் – பாறைகள், மலைகளின் ஊடான ஒரு கி.மீ தூரம் இறுதியும் மூன்றாவதுமான பயணப் படிநிலைகளாகும். இறுதிப்பகுதி கிட்டத்தட்ட 70 பாகை மேல்நோக்கிய சாய்வுக் கோணத்தில் ஏறவேண்டும். இரண்டாவதும் மூன்றாவதுமான கட்டங்கள் மிகச் சவாலானவை.

இப் பயணம் அனுபவமும் பயிற்சியுமுடைய மலையேற்ற வழிகாட்டிகளால் குழுநிலையில் நெறிப்படுத்தப்படுகின்றன. நாம் சென்ற குழுவில் கிட்டத்தட்ட 150 பேர் இடம்பெற்றிருந்தனர். இத்தனை பேரும் ஒருவர் பின் ஒருவராக வரிசையிலேயே பெருமளவு தூரமும் நடக்க வேண்டும். பரந்தவெளியாயினும் பெரும்பாலும் ஒற்றையடிப் பாதையிலேயே நடக்க முடியும். பயணவழியின் தன்மை அத்தகையது. கற்களும், பாறைகளும், பனியும் பனிப்பாறையுமான அந்தப் பயணவழியில் காலடிகளைக் கவனமாகவும் குறித்த சமநிலையுடைய வேகத்திலும் எடுத்து வைக்க வேண்டும்.

மலைப்பயணத்திற்கும் காலநிலைக்குமுரிய உடைகள், சப்பாத்துகள், போதியளவு தண்ணீர் மற்றும் உணவு முக்கியமாக எடுத்துச் செல்ல வேண்டும். மலை உச்சியில் நின்ற போதும் தான் குளிராடைகளின் தேவையை அதிகம் உணர முடியும். இரண்டாவது கட்டமான பனிப்பாறை மேல் நடக்கும் போது, அனைவரும் கயிற்றினால் ஒருவருடன் ஒருவர் பிணைக்கப்பட்ட நிலையில் நடக்க வேண்டும். இது ஒரு முக்கிய பாதுகாப்பு ஏற்பாடு. மேற்பகுதியில் உதிர்பனி பரந்திக்கின்றபோதும் அதன் கீழ் உறைபனி படிந்துள்ளது. உறைபனிப் பரப்பில் நடக்கும் போது வெடிப்பு ஏற்பட வாய்ப்புண்டு. உதிர்பனிக்குக் கீழ் மறைந்துள்ள பனிப்பாறைகளில் கண்ணுக்குத் தெரியாத வெடிப்புகள் இருக்கக்கூடும் எனவும்வழிகாட்டிகள் கூறினர்.

வெடிப்பு ஏற்படுமாயின் பெரும் ஆழத்திற்குள் விழுகின்ற ஆபத்து உள்ளது.

22 ஆம் பக்கம் பார்க்க...









# இலங்கையில் கல்வி கற்க மரமேறும் மாணவர்கள்!



இனமொழி மதங்களுக்கு அப்பால் ஒரு பார்வை. இலங்கையில் இணைய வழி கற்கையில் இணைந்து கொள்வதற்காக நெட்வோர்க் கிடைக்காத மாணவர்கள் மிகவும் ஆபத்தினை சந்தித்து தமது கல்வியினை கற்கும் புகைப்படங்கள் வெளியாகியுள்ளது. பொகிட்டிவாயவைச் சேர்ந்த ஆசிரியையும் 45 மாணவர்களும் இணைய சிக்னலைப் பெறுவதற்காக உயரமான பாறையொன்றின் மீது ஏறுகின்றனர். கொவிட் காரணமாக பாடசாலைகளுக்கு செல்ல முடியாத தனது மாணவர்களிற்கான பாடங்களை வழங்குவதற்காக தகவல் தொழில்நுட்ப ஆசிரியை நிமாலி அனுருதிகா அந்த சிக்னல்களைப் பயன்படுத்துகின்றார். அவர்கள் அனைவரிடமும் கையடக்கத் தொலைபேசியோ அல்லது மடிக்கணினியோ இல்லை. இந்நிலையில் நான்கு ஐந்து சிறுவர்கள் ஒரே கையடக்கத் தொலைபேசியை அல்லது மடிக்கணினியைப் பயன்படுத்துகின்றனர்.

மாணவர்கள் இவ்வாறு இணைய வசதியினை பெறுவதற்காக 30 அடி உயரமான மரத்தில் ஏறுவதாகவும் அதிலிருந்தாலே மாணவர்களினால் இணைய வசதிகளைப் பெற முடியும் எனவும் கூறப்படுகின்றது. இந்நிலையில் அவர்கள் ஒவ்வொருவராக அம்மரத்தில் ஏறி தங்கள் பாடங்களை பதிவேற்றிக் கொள்கின்றதாகவும் கூறப்படுகின்றது. மாணவர்கள் இவ்வாறு ஆபத்தான முறைகளில் கல்விபயிலும் புகைப்படங்கள் சமூக வலைத் தளங்களில் வெளியாகியுள்ளன. ■



## காத்திருக்கின்றேன்!



**2021** புரட்டாசி மாதம் வெற்றிமணியின் 300 வது இதழ் வெளிவருகிறது. இதோ வருகிறது! அதோ வருகிறது!! முற்றிலும் வித்தியாசமான முறையில், உங்கள் கரங்களில் கிடைக்க இருக்கிறது, என்ற எந்தவித பந்தாவோ! எதிர்பார்ப்போ!! ஊட்ட விரும்பவில்லை. ஒன்று மட்டும் அது 300 வது இதழ்! அதற்கான உங்கள் பதில்! இன்னும் உங்களுடன் பயணிக்கும் வெற்றிமணிக்கு எந்தவகையில் உங்கள் ஆதரவு இருக்கும், என்பதனை மட்டும் காணக் காத்திருக்கின்றேன்.

**என்றும் தமிழுடன்**
**மு.க.சு.சிவகுமாரன் பிரதம ஆசிரியர்: வெற்றிமணி**

21 ஆம் பக்கத் தொடர்ச்சி...




அவ்வாறான விபத்துகள் நடந்து யாரேனும் பாறைவெடிப்பினூடு கீழே விழநேர்ந்தால் அவரை அல்லது அவர்களை ஏனையவர்கள் கூட்டுப்பலத்துடன் வெளியில் தூக்கி எடுப்பதற்கானதே கயிற்றினால் அனைவரும் பிணைக்கப்படுவதற்கான முதன்மைக்காரணம். பனிப்பாறைகள் எந்நேரமும் அசைந்துகொண்டிருப்பவை எனப்படுகிறது. வெடிப்புகள் விரிவடைவதும் சுருங்குவதுமாக காலநிலைக்கேற்ப மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கும்.

பனிக்காலங்களில் மலையேற்றப் பயணங்கள் நிகழ்வதில்லை. பனிப்பொழிவு இல்லாத, ஜூன் ஆரம்பத்திலிருந்து செப்ரெம்பர் நடுப்பகுதி வரையான 4 மாதங்கள் மட்டுமே மலை உச்சிக்கான பயணங்கள் நடைபெறுகின்றன. ஆயினும் கற்பாறைகள் மற்றும் திடமான நிலப்பரப்புகள் தவிர்ந்த இப்பிரதேசத்தின் பல பகுதிகளில் கோடை முழுவதும் பனி கரையாமல் இருக்கின்றது. பனிப்பாறைகளும் உள்ளன. ஆண்டு முழுவதும் பனிச்சறுக்கல் பயிற்சிகள், விளையாட்டுகள் இடம்பெறக்கூடிய தனி இடங்கள் அங்கு உள்ளன.

பனிப்பறை மீது நடப்பது கிட்டத்தட்ட ஒரு மணிநேரப் பயணம். அதற்கு முன்னரான பாதுகாப்பு விதிமுறைகள் பற்றிய தகவல் வழங்கல் மற்றும் கயிற்றில் அனைவரையும் பிணைக்கும் செயற்பாட்டுக்கு கிட்டத்தட்ட அரைமணி நேரம் ஆகியிருந்தது. பனிப்பாறை மீது நடக்கும் போது நினைத்த நேரம் இளைப்பாற முடியாது. அனைவரும் ஒரே வேகத்தையும் கயிற்றில் ஒரே அளவு இடைவெளியைப் பேணியபடியும் நடக்கவேண்டும். நடைபாதைகூட ஒற்றையடிப் பாதைதான். ஒற்றையடிப்பாதையிலிருந்து விலகிக் காலடிகளை வைக்கும் போது பனிச்சேற்றுக்குள் கால்கள் புதைந்து விடும்.

இறுதிப்பகுதி கத்தியின் கூரினையொத்த முனைகளைக் கொண்ட பாறைகளும் கற்களினாலுமானது. நீளமான காலடிகளை வைத்து ஏற வேண்டும். தருணங்களில் தொடர்ச்சியாக பாறைகளின் விளிம்புகளில் கைகளை ஊன்றி ஏறவேண்டும். இத்தனை மணிநேரக் கடினமான நடைபயணம் என்றாலும் மலை உச்சியை அடைந்தவுடன் பட்ட பாடுகள் மறைந்து புத்துணர்வு கிட்டிவிடுகிறது. இதுவே இந்தப்பயணத்தின் உளரீதியான அடைவு. ஆண்டுதோறும் சராசரியாக உள்நாடு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த 25,000 பேர் வரை மலை உச்சிக்குப் பயணம் மேற்கொள்கின்றனர் எனத் தரவுகள் கூறுகின்றன. ■

**ஜேர்மன் வாழ் எழுத்தாளர்களுக்கு வேண்டுகோள்**

விரைவில் வெளிவரவுள்ள
**'படைப்பாளர்கள்'**
என்னும் நூலில் உங்கள் நூல் விபரம் மற்றும் ஆக்கதாரர்களின் விபரங்களையும் பதிவு செய்ய வேண்டும் என்ற முனைப்பில் ஈடுபட்டுள்ளோம்.

உங்கள் நூலாக்க விபரங்களைப் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம்.

குறிப்பு (ebook) ஆகவும் நூல் உருவில் வெளியிடப்படும்.
மேலதிக விபரங்களுக்கு
(germantamilwriter@outlook.com)

சு.பாக்கியநாதன்
0152 10378556
பி.எஸ்.இராஜகருணா
0176 31740702



**வெற்றிமணி திருமண சேவை**




இந்து மதத்தைச் சேர்ந்த யேர்மனியில் பிறந்து கல்விகற்று (Machinenbau) என்ஜினியராக கடமையாற்றும் 30 வயது உடைய ஆண்மகனுக்கு யேர்மனியில் Nordrhein-Westfalen இல் மணமகள் தேவை. பெற்றோர் மட்டும் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு இலக்கம்: 0175 850 1489

மணமகள், மணமகன் தேவைகளை பிரசுரிக்கலாம்.
3 தடவை பிரசுரிக்க குறைந்த கட்டணமே அறவிடப்படும்.

அன்பும் அறனும் உடைத்தாயின்
இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது

**ஆசியா சமுத்திரம்**
**Asiatischer super markt**

R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic: DEUTDEDB390
Email: mediajara@gmail.com
Handy: 01520 900 90 30

Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281

ஆசிய, ஆபிரிக்க மற்றும் இலங்கை, இந்திய பலசரக்குப் பொருட்கள், மரக்கறி வகைகள், கடல் உணவுவகைகள் அனைத்திற்கும் எம்மை நாடுங்கள்.



துரித பணமாற்றுச் சேவை
Hückelhoven




## “அப்பா பப்படம் உடைத்துத் தானே சாப்பிட வேண்டும்”



**நாம்** கடந்து செல்லுகின்ற பாதையிலே சின்னச் சின்ன நிகழ்வுகள் எம்மை அன்று முழுவதும் மகிழ்ச்சிக் கடலில் ஆழச் செய்துவிடுகின்றது. கள்ளங் கபடமற்ற பிஞ்சுக் குழந்தைகளின் வார்த்தைகளும் நடத்தைகளும் எம்மை மீறி எம்முடைய மனதால் அவர்களை கட்டியணைத்து முத்தமிடச் செய்து விடுகின்றன. அவை இலக்கியத்தில் இடம் பிடித்து விடுகின்றன. இல்லாவிட்டால் பாரதியார்

“கன்னத்தில் முத்தமிட்டால்
உள்ளந்தான் கள்வெறி
கொள்ளுதடி உன்னைத்
தழுவிடிலோ – கண்ணம்மா
உன்மத்த மாகு தடீ!”

என்று பாடியிருக்க மாட்டார். குழந்தைகள் சொல்லும் செயலும் போதையைத் தரும் என்பது அனுபவித்தவர்கள் புரிந்து கொள்வார்கள்.

பிள்ளைகளை கண்ணன் விம்பம் என்பார்கள். கோகுலத்தில் கண்ணன் செய்த திருவிளையாடல் வாலிப வயதிலும் கூட வந்தது. கண்ணன் குறும்புகளைப் பெரியாழ்வார் அழகாக வர்ணிப்பார்.

“புட்டியிற் சேறும் புழுதியும்
கொண்டுவந்து அட்டி யமுக்கி
அகம்புக் கறியாமே
சட்டித் தயிரும் தடாவினில்
வெண்ணெயும்
உண் பட்டிக் கன்றே”

அதாவது கண்ணன் புழுதியில் விளையாடும் போது உடம்பில் வியர்வை உண்டாகும். அந்த வியர்வையால் நிலம் சேறாகும். வியர்வை படாத இடம் புழுதியாக இருக்கும். அந்தப் புழுதியோடும் சேறோடும் தாயை வந்து அணைத்துக் கொள்வான். அப்படியே சென்று தாய்க்குத் தெரியாமல் வீட்டிலிருக்கும் தயிரையும் வெண்ணெயையும் உண்பான் என்று பாடுகின்றார்.

பிள்ளைகள் செய்கின்ற காரியங்கள் பெற்றோரை அறிவு பெற்றோராகவும், பிள்ளைகளை எவ்வாறு வளர்க்க வேண்டும் என்பதற்கும் பாடம் கற்பிப்பனவாகவும் இருக்கின்றன.

ஒரு சிறுவன் ஒரு திருமண விழாவுக்கு தன்னுடைய ஓடுகின்ற விளையாட்டு பொம்மை சிற்றூந்தை(car) கொண்டு வந்து விளையாடுகின்றார். அதனைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு சிறுமி ஓடி வந்து அந்த சிற்றூந்தை தரும்படிக் கேட்கின்றாள். முடியாது என அந்தச் சிறுவன் மறுக்கும் போது தன்னுடைய முதலாவது கலையை அச்சிறுமி கையாளுகின்றாள். அவனை இழுத்து முத்தம் கொடுக்க எத்தனிக்கின்றாள். முத்தம் அந்தச் சிறுவனை மயக்கும் என்று நம்பினாள் போலிருக்கின்றது. ஆனால், அவனோ எதற்கும் இசைவதாக இல்லை. இரண்டாவது கலையாக இரண்டு கைகளையும் கூப்பி வணங்கி அந்த சிற்றூந்தைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிக்கின்றாள். பணிவாகக் கேட்டுப் பார்ப்போம் என்று அதீத 2 வயது மூளை சிந்தித்திருக்கின்றது. குறிப்பாக அந்தச் சிறுமிக்கு வயது 2 தான் இருக்கும். அதுவும் பலிக்கவில்லை. மூன்றாவதான கலையாக அடம்பிடித்து அழுகின்றாள்.

“சற்றுன் முகஞ் சிவந்தால்–
மனது சஞ்சல மாகு தடீ!
நெற்றி சுருங்கக்
கண்டால்–எனக்கு
நெஞ்சம் பதைக்கு தடீ!”

தாய் ஓடி வருகின்றாள். சிறுவனின் தந்தை ஒருவாறாக சிறுவனைச் சமாதானப் படுத்தி அந்த விளையாட்டுப் சிற்றூந்தை அச்சிறுமியிடம் கையளிக்கின்றார். விளையாட்டுப் பொருள் கைமாறப்பட்டது. ஆனால், உரிமைக்காரனோ தந்தையை உசார்படுத்திக் கொண்டே இருந்தார். திரும்பவும் இந்த பொம்மை உரிமைக்காரனிடம் வருகின்றது. திரும்பவும் பிள்ளை அடம்பிடிக்கின்றாள். கோபம் கொண்ட சிறுவன் அடிப்பேன் கொய்யாளா, பைத்தியம் என்ற வார்த்தைகளை வெளியிடுகின்றார். சினிமாவின் தாக்கம் பிள்ளையில் வெளிப்படுகின்றது. புலம்பெயர்வில் பெற்றோர் பிள்ளைகளுக்கு தமிழ் கற்றுக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. சினிமா கற்றுக் கொடுக்கின்றது. அது எதைக் கற்றுக் கொடுக்கின்றது என்பதில் தான் பெற்றோரின் கவனம் இருக்க வேண்டும்.

சின்ன மூளைக்குள் நடந்த ஒரு சம்பவத்தை தந்தை எடுத்துச் சொல்லுகின்றார். பப்படம் கடையிலே வாங்கி வந்த போது அந்தப் பப்படம் இரண்டாக உடைந்து விடுகின்றது. அந்தச் சிறுவன் இந்தப் பப்படத்தை ஒட்டித் தாருங்கள் என்று அடம்பிடித்து அழுகின்றான். சமாளிக்க முடியாத தந்தையும் கையிலே ஒட்டுகின்ற செல்லோடேப்பை கொடுத்து நீயே ஒட்டிவிடு என்று கொடுக்கின்றார். சிறுவனும் கையில் வாங்கி ஒட்டும் போது பப்படம் சுக்கு நூறாக உடைந்து விடுகின்றது. அந்தக்கணமே அப்பா பப்படம் உடைத்துத் தானே சாப்பிட வேண்டும் என்று சொல்லி சத்தமில்லாமல் சாப்பிடுகின்றார்.

இதேபோன்று தம்முடைய பிழைகளைச் சமாளிப்பதற்கு சின்ன வயதிலே தெரிந்து கொள்ளுகின்ற சிறுவர்களின் நடவடிக்கைகளைப் பார்க்கின்றோம். பிள்ளையின் கையில் இருக்கும் பொருளை வாங்குவதற்கு பெற்றோர் என்ன கலைகளைப் பயன்படுத்துகின்றார்களோ. அதே கலையை அப்பிள்ளையும் மற்றவர்களிடம் பயன்படுத்துகின்றது. அடம் பிடித்துப் பெறுகின்ற உரிமை தவறு என்னும் பட்சத்தில் பிள்ளை தன்னைச் சமாதானப்படுத்திக் கொள்ளப் பழகுகின்றது. பலர் கூடுகின்ற இடத்திற்கு சில பொருள்களைக் கொண்டு செல்வதில் உள்ளசங்கடங்களைப் பெற்றோர் கற்றுக் கொள்ளுகின்றார்கள்.

ஒரு பிள்ளை தாயிடமிருந்து அதிகமான அறிவுத் திறனைப் பெற்றுக் கொள்ளுகின்றது என்பதையே தாயைப் போல் பிள்ளை நூலைப் போல் சேலை என்ற பழமொழி எடுத்துக் காட்டுகின்றது. கொடூரமான உணர்வுகள் தாய் தந்தையிடமிருந்து கடத்தப்படும் போது பிள்ளைகளின் மரபணுக்களையே மாற்றிவிடுகின்றன. பிள்ளைகளின் வளர்ச்சியிலே அவர்களுக்கு மனஅழுத்தம் ஏற்படுத்தும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

பரம்பரை மூலக்கூறுகளின் பதிவுகளையும், சூழல் கற்றுத் தரும் பாடங்களையும், பாடசாலைக் கல்வி கற்றுத் தரும் பாடங்களையும் மனித வளர்ச்சியில் மூளை உள்வாங்கி பதிவுப் பலகையில் போட்டு விடுகின்றன. அவை தலைமுறை தாண்டி வளருகின்ற சமுதாயம் ஒரு படி மேலான அறிவு பெறுவதற்குக் காரணமாக அமைகின்றன. பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு கடமைக்காகவே பிறக்கின்றான். இதனையே அப்துல்கலாம் தன்னுடைய வரிகளில் பிள்ளைகள் உங்களுக்கூடாக வந்தவர்கள் என்பதற்காக உங்களுடைய ஆசைகளை அவர்களிடம் திணிக்காதீர்கள் என்கிறார்.

எனவே இயற்கையிலேயே கடத்தப்படும் நுண்ணறிவுத் திறன்களும், பரம்பரை அலகுகளும் முக்கியமாகச் சூழலும் ஆட்சி செய்யும் ஒரு கூட்டுச் சக்தியே பிள்ளைகள் என்பதைப் பெற்றோரும் சமூகமும் உணர்ந்து கொள்ள வேண்டும். ■


‘சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்”



aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH
Dr. (h.c) Nageswaran Arulrasa D.Litt (CEO)
Eidgenössische finanzmarktaufsicht Nr.35302
Fachmann Für Versicherung & Vorsorge
Hauptstrasse 54, 6015 Luzern, Switzerland
079 8000 100 | arulnages@yahoo.com



finma : 34598 cicero : 25605

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# ஐந்து நொடி ஒழுக்கம்

நாம் அனைவருமே ஹாலிவுட் படங்களை பார்ப்பது உண்டு. அதில் சூப்பர் பவர் கொண்ட கதாநாயகர்கள் நடிக்கிறார்கள். ஒரு முறை யோசித்து பாருங்கள்! எங்களிற்கு ஒரு சூப்பர் பவர் கிடைத்தால் எப்படி இருக்கும்?

இந்த ஐந்து நொடி ஒழுக்கம் என்பது உங்களுக்கு ஒரு மிக பெரிய சூப்பர் பவரை தருவதற்கான ஒரு வழிமுறையாக அமைந்திருக்கப் போகின்றது.




இதை கண்டுபிடித்தவர் யார்? இந்த சூப்பர் பவரை உங்களுக்குத் தரப் போவதும் ஒரு மிகப் பெரிய ஞானி. அவர் யார் தெரியுமா? கண்ணாடி முன் நில்லுங்கள். ஆம் அதில் தெரியும் நீங்கள் தான் உங்களுடைய ஞானி. உங்களிற்கு இந்த சூப்பர் பவரை கொடுக்கப் போவது நீங்கள் தான். ஆச்சரியமாக இருக்கின்றதா? உங்களிடம் ஒரு கேள்வி. 5,4,3,2,1...

கேள்வி: உங்களுடைய வாகனத்தில் இருக்கின்ற அந்த பிரேக் என்ன தொழிற்பாட்டை செய்கிறது என்று உங்களுக்கு தெரியுமா? இந்தக் கேள்வியை ஒரு பள்ளிக்கூடத்தின் அதிபர் வகுப்பறையில் கேட்கின்றார். ஆசிரியர்கள் உட்பட மாணவர்கள் அனைவருமே சொல்லுகின்றார்கள் வாகனத்தின் வேகத்தை குறைப்பதற்காக இந்த பிரேக் இருக்கின்றது என்று சொல்கின்றார்கள். ஒரே ஒரு மாணவன் மட்டும் எழுந்து சொல்லுகின்றான் வாகனத்தின் வேகத்தை கூட்டுவதற்காக இந்த பிரேக் இருக்கின்றது என்று சொல்லுகின்றார். அதிபர் சொல்லுகின்றார் மிகச் சரியான விடை இதுதான்.

வாகனத்தை எவ்வளவு வேகமாக ஓட்டினாலும் வாகனத்தை நிறுத்த முடியும் என்கின்ற நம்பிக்கைதான், எமக்கு வாகனத்தை ஓட்டுவதற்கான தைரியத்தைக் கொடுக்கிறது. அதேபோன்றுதான் உங்களுடைய வாழ்க்கைப் பயணத்தை வேகமாக ஓட்ட, உங்களுடைய வாழ்க்கையை தேவையான இடத்தில் நிப்பாட்டுவதற்கான பிரேக் உங்களுடைய கையில் இருக்க வேண்டும். உங்களுடைய கையில் அந்த பிரேக் இருக்கின்றதா? அந்த பிரேக்காக தான் இந்த ஐந்து நொடி ஒழுக்கம் ஆகும். மிக இலகுவான செயல்பாடுதான். எப்படி செய்ய வேண்டும் என்றால், நீங்கள் ஒரு காரியத்தை செய்யப் போகிறீர்கள் என்று நினைத்தீர்கள் என்றால்,

5,4,3,2,1... என்று மிக வேகமாக சொல்லிவிட்டு அந்த காரியத்தை செய்ய ஆரம்பித்தீர்கள் என்றால், அந்த காரியத்தை மிகத் தெளிவாக செய்து முடிப்பீர்கள். ஏன் இந்த இலக்கத்தைச் சொல்ல வேண்டுமென்றால், சில நாட்களில் உங்களுக்கு மிக அலுப்பாக இருக்கும். உதாரணத்திற்கு நீங்கள் கடினமாக வேலை செய்து அமைதியாக அமர்ந்துள்ள ஒரு நாளில், உங்களுடைய மனது சொல்லுகின்றது, ‘நீ கடினமாக உழைத்து இருக்கின்றாய். எழுந்து சென்று தண்ணீர் குடிப்பதை விட, படுத்து நித்திரை கொள்ளு!’ என்று சொல்கின்றது. உங்களுடைய உள்ளுணர்வு சொல்லுகின்றது, உடலுக்கு தாகம் ஏற்படுகின்றது தண்ணீர் குடி! என்று சொல்கின்றது. இப்போது மனம் சொல்வதைக் கேட்பதா? உள்ளுணர்வு சொல்வதை கேட்பதா?

தாகத்திற்கு தண்ணீர் குடிப்பது என்பது, உடல் ஆரோக்கியத்திற்கானது, ஆகவே அதைத்தான் நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றால், மனதுக்கு ஒரு ஐந்து நொடி பிரேக் போட முடிந்தால், அந்த ஐந்து நொடியில் நீங்கள் உங்களுடைய தாகத்தை தீர்த்து விடுவீர்கள். அந்த ஐந்து நொடி பிரேக் போடுவதற்குதான், இந்த ஐந்து நொடி ஒழுக்கம் பயன்படுகின்றது. எவ்வாறு செய்யலாம்?

5,4,3,2,1... என்று இலக்கத்தை எண்ணி உடனடியாக ஒன்று என்று சொல்லி முடிக்கும் பொழுது நீங்கள் கதிரையில் இருந்து எழுந்தீர்கள் என்றால், அதே வேகத்தில் நீங்கள் சென்று தண்ணீரை குடித்

சி.சிவவினோபன்
(யேர்மனி)

துவிட்டு வந்து அமர முடியும். இப்போது உங்களுக்கு ஒரு சந்தேகம் ஏற்படும் நான் சாதாரணமாக எழுந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தால் என்னால் எழுந்து கொள்ள முடியவில்லை. இவ்வாறு 5 லிருந்து 1 வரை எண்ணினால் மட்டும் என்னால் எழுந்து கொள்ள முடியுமா என்று ஒரு சந்தேகம் ஏற்படும்? இதற்குத் தான் இந்த ஐந்து நொடி ஒழுக்கத்தை உருவாக்கிய Mel Robbins சொல்லுகின்றார்.

தான் 41 வயது வரை மிகவும் கடினமான ஒரு வாழ்க்கையிலிருந்தேன், போதைக்கு அடிமையாகி, உடல் பருமன் அடைந்தது, என் வியாபாரத்தில் நட்டங்கள் ஏற்பட்டது. வாழ்க்கையில் என்ன செய்வதென்றே தெரியாமல் இருந்த அந்த வேளையில், தான் ஒரு றாக்கட் ஏவுகணை எழுகின்ற செயல்பாட்டை பார்த்தேன். அதில் 5,4,3,2,1... என்று சொன்னவுடன் அந்த றாக்கட் மிக வேகமாக பறந்தது.

என் மனதுக்குள் ஒரு கேள்வி எழுந்தது நானும் இந்த றாக்கட்டை போன்று மிக வேகமாக செயல் பட்டால் எப்படி இருக்கும்? எனக்கும் ஒரு சக்தி கிடைத்தால் எப்படி இருக்கும்? என்ற கேள்வி ஏற்பட்டது. நான் மறுநாள் காலை எழுந்து கொள்வதற்கு முன்பாக 5,4,3,2,1... என்று சொல்லி என்னை நானே ஒரு றாக்கட் ஆக நினைத்துக்கொண்டு மிக வேகமாக எழுந்தேன், அதுவரையும் விடியற்காலையில் எழுந்து கொள்ள முடியாத எனக்கு அது ஒரு மிகப் பெரிய சக்தியைக் கொடுத்தது. நான் விடியற்காலையில் எழுந்து விட்டு, அதற்குப் பின்பாக ஒவ்வொரு செயல்பாடுகளை செய்யும் பொழுது ம் இவ்வாறு என்னை நானே ஒரு றாக்கட் ஆக நினைத்து 5 லிருந்து 1 வரை எண்ணி நான் செயல்பட்டேன்.

என் செயல்கள் அனைத்தும் வெற்றி அளித்தது. ஒரு சில மாதங்களிலேயே என் போதைப்பழக்கம் விட்டுப் போனது. உடல் பருமன் குறைந்து. வியாபாரத்திலும் நல்ல வெற்றி கிடைத்தது. நான் இன்று நல்ல ஒரு வாழ்க்கை நிலையில் இருக்கின்றேன், என்று சொல்கின்றார். ஏன் இவ்வாறு

நடக்கின்றது என்றால் 5 லிருந்து 1 வரை ஒரு சிறிய அழுத்தத்தைச் சேர்த்து நீங்கள் எண்ணும்பொழுது, அந்த வேகம், உங்களை இலக்கம் ஒன்று சொல்லும் பொழுதே இயங்க வைக்கின்றது.

உடன் இலக்கங்கள் மனதில் முடிந்துவிடுகின்றன. ஆகவே இதற்குப் பின்பு இயங்குவதைத்

26 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# இலங்கை, மலையகத்தின் நாட்டாரிலக்கியம்

## ஓர் அறிமுகம்

மாலினி மோகன்
(கொட்டகலை– இலங்கை)

**தூரமடி தொப்பி தோட்டம்
தொடர்ந்துவாடி நடந்து போவோம்...**

கலை என்பது பொதுவாக மனதிற்கு மகிழ்ச்சியையும், புத்துணர்வையும் ஏற்படுத்தும் ஆற்றல் கொண்டதாகும்.

கலை, அழகு, புலமை, அறிவு என்பன எங்கும் வியாபித்துள்ள தெய்வீக அம்சங்களாகும். அவற்றின் வெளிப்பாடு ஒரு குறிப்பிட்ட நபர் அல்லது இடத்திலிருந்துதான் தோற்றம் பெற முடியமென்றில்லை. எங்கேயும் எப்படியும் அரும்பித் தோற்றமளிக்க முடியும். கல்வியறிவோ, பாடசாலை அனுபவமோ அற்ற பலரும் அவ்வப்போது தமது அனுபவங்களை மூலதனமாகக் கொண்டு தாம் வாழ்ந்து வந்த கிராமிய சூழலிலே கவித்துவ உணர்வு மிக்க கவிகளை யாத்து பிரமிக்க வைத்தனர். இதுவே காலம் காலமாக நாட்டாரியல் எனும் புதுமை இலக்கியங்களாக வளர்ந்து வந்திருக்கின்றன. நவீன இலக்கியங்களுக்கு இது மூலாதாரமாகவும் தோற்றம் பெற்றது எனலாம். பின்னர் நாட்டாரிலக்கியத்துறை தனி ஒரு அம்சமாக வளர்ந்து இன்று தனியாக ஆய்வுக்கு உட்படுத்தப்படும் ஒரு தனித்துவ துறையாக மிளிர்கிறது. நாட்டார் இலக்கியமானது, கிராமிய இலக்கியம், பாமரப்பாடல்கள், எழுத்தாக்கா கவிதைகள், வாய்மொழி இலக்கியம், மக்கள் மரபியல், பொதுப்புராணவியல், நாட்டுப் பாடல்கள் என பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டு வருகிறது.

நீண்டதொரு இலக்கிய பாரம்பரியத்தையும் இலக்கண மரபையும் உடைய உயர் செம்மொழியாம் எம் தமிழ் மொழியில் நாட்டாரிலிக்கியம் எனபது பன்னெடுங்காலந் தொட்டே பரவி வந்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். அந்தவகையில் நாட்டாரிலக்கியம் பற்றி இலங்கை யாழ் பல்கலைக்கழகத்தினால் 1980 ல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முயற்சிகள் ஓரளவு கருத்துரைக்கக் கூடியதாக இருந்தது. மேலும் 1995 இந்து சமய கலாசாத் திணைக்களத்தினால் நிகழ்த்தப்பட்ட இலங்கை நாட்டாரியல் பற்றிய கருத்தரங்கும் கோடிட்டுக் காட்டக்கூடியதாகும். மேலும் அண்மைய காலங்களில் உயர்கல்வியை பயில்வோர்களாலும், உயர் கல்வித் துறைகளிலும் நாட்டரிலக்கியம் தொடர்பாக பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய கிராமப்புற வாய்மொழி இலக்கியங்களை ஆய்வுக்குரிய இலக்கியங்களாக அனைத்துலக கல்விப் புலத்திற்கும் கொண்டு வந்த பெருமை ஜேக்கப் கிரீம் என்ற ஜேர்மன் மொழியியலாளரையே சாரும்.

பொதுவாக எந்த ஒரு மொழியிலும் எழுத்துக்கள் தோன்றுவதற்கு முன்னர் வாய்மொழி பாடல்களும், கதைகளும் தோன்றி விட்டன எனக் கூறப்படுகிறது. அவ்வாறு தோன்றிய பாடல்,கதை, கவிதை வடிவங்களில் தோற்றம் பெற்றதுதான் இந் நாட்டாரிலக்கியங்கள் ஆகும்.

இலங்கையில் நாட்டார் இலக்கியத்தை மலையக நாட்டாரிலக்கியம், வடகிழக்கு நாட்டாரிலக்கியம் என பிரித்து நோக்கலாம். பொதுவாக வடகிழக்கு நாட்டாரிலக்கியங்கள் கடற்றொழில் பாடல்கள், தாலாட்டுப்பாடல்களாக இருக்கின்றது. சுமார் கால் நூற்றாண்டுக்கு முன்பே நாட்டாரிலக்கிய சாயலில் ஒலித்த பாடல்கள் இருப்பதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. கவிஞர் புதுவை இரத்தினத்துரையின் கவிகள் சில இதனை பறைசாற்றுகின்றன.

**''வெள்ளி நிலா விளக்கேற்றும்
நேரம் கடல்வீசுகின்ற
காற்றில்உப்பின் ஈரம்
தள்ளிவலை ஏற்றி வள்ளம் போகும் –
மீன் அள்ளி வர நீண்ட நேரம் ஆகும்
எங்கள் துயர் தெரியாது
என்னவென்று புரியாது...
இங்கிருந்து பாடுகின்ற எங்கள்
குரல் கேட்காது...''**

என்று தொடங்கும் பாடலில் மிகுந்த ஆபத்துக்கு மத்தியில் கடலுக்கு சென்று மீண்டு வரும் மக்களின் வாழ்வினை உணர்வு பூர்வமாக சித்தரித்து காட்டுவதாக அமைகின்றது.

மலையகத்தின் நாட்டார் பாடல்கள் கிராமிய மக்களின் வாழ்வை, உணர்வுகளை கலை கலாசாரத்தை பிரதிபலித்துக்காட்டும் கண்ணாடியாக திகழ்ந்துள்ளது என்றால் அது மிகையல்ல. மலையகத்தில் அவ்வாறான நாட்டார் இலக்கியம் பின்வரும் பல வகைகளில் காணப்படுகின்றது.. பொன்னர் சங்கர் கூத்து, காமன் கூத்து, மதுரை வீரன் கதை, அர்ச்சுணன் தபசு, ஏர்ப்பாடல், தாலாட்டுப்பாடல், தொழிற்பாடல் என சொல்லிக்கொண்டே போகலாம்.

மலையக மக்கள் தென்னிந்திய தமிழ் கிராம பின்னணியை தமது தாயகமாக கொண்டவர்கள். தென்னிந்தியாவில் பாடப்பட்ட நாட்டார் பாடல்களை எவ்வாறு இலங்கை பெருந்தோட்ட சூழலுக்கு ஏற்ப மாற்றியமைத்தார்கள் பின்வரும் பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

**''தென்னிந்தியாவில்..
ஏத்தமடி தேவிகுளம்
இறக்கமடி மூணாறு
தூரமடி நைநாக்காடு
தொடர்ந்துவாடி நடந்து
போவோம்.. என்ற பாடல்
இலங்கையில்...
ஏத்தமடி பெத்தராசு
இறக்கமடி இராசா தோட்டம்
தூரமடி தொப்பி தோட்டம்
தொடர்ந்துவாடி நடந்து
போவோம்..''**

இதன் மூலம் தமது புதிய சூழ்நிலைக்கு அவர்கள் வாழ்க்கை முறை மாற்றமடைந்ததை எடுத்துக்காட்டுகின்றது. அதாவது ஒவ்வொரு நிகழ்வின் மீதும் பொதுமக்கள் கொண்டிருக்கின்ற உணர்வினை எடுத்துச் சொல்கிறது.

**''தண்டுக்கல தோட்டத்திலே
திண்டு முண்டு கணக்கப்பிள்ளை
துண்டு துண்டா வெட்டிட்டாங்க''**

என செல்லும் இப்பாடல் ஹட்டன் பகுதியில் தண்டுக்கலா என்ற தோட்டத்தில் நடந்த சம்பவத்தை ஆதாரமாக கொண்டு ஜில் சுல்தான் என்பவரால் எழுதப்பட்ட பாடலாகும்.

பிறந்த மண்ணை துறந்து புகுந்த மண்ணில் தம்

26 ஆம் பக்கம் பார்க்க...




# இலங்கை, மலையகத்தின் நாட்டாரிலக்கியம்

ஓர் அறிமுகம்

25 ஆம் பக்கத் தொடர்ச்சி...

வாழ்வை அமைத்த போது. அவர்கள் உணர்வு பின்வருமாறு உருவெடுத்தது.

**‘‘கூனி அடிச்ச மலை**
**கோப்பி கண்ணு போட்ட மலை**
**அண்ணனைத் தோத்த மலை**
**அந்தா தெரியுதடி...**
**எண்ணிக் குழி வெட்டி**
**இடுப்பொடஞ்சி நிக்கையிலே**
**வெட்டு வெட்டு என்கிறானே**
**வேலையத்த கங்காணி....’’**

என தொடர்ந்து செல்லும் இவ்வரிகள் மூலம் மலையக மக்கள் மீதான உழைப்பு , சுரண்டல், வேதனை என்பன எடுத்துக்காட்டப்படுகின்றன. என்றாலும் தமது துன்ப துயரங்களுக்கு குரல் கொடுத்த மலையக மக்கள் அடக்கு, ஒடுக்கு முறைக்கு எதிராக தமது போர்க்குணத்தையும் வெளிக்காட்டும் வகையில் நாட்டார் பாடல்களை பாடியுள்ளனர்.

**‘‘ஆனை வாரத பாருங்கடி**
**ஆனா அசைஞ்சி வாரத பாருங்கடி**
**ஆனா மேல வரும் சின்ன தொரய**
**அதட்டி சம்பளம் கேளுங்கடி...’’**

தன் குழந்தையை பாச உணர்வு பொங்க உறங்க வைக்கும் ஏறாளமான தாலாட்டுப் பாடல்களை கிராம மக்கள் தமது நாட்டுப்புற வாசத்துடன் அள்ளி இறைத்துள்ளனர். உதாரணமாக,

**‘‘முத்தே பவளமே என்**
**முக்கனியே சக்கரையே...**
**கொத்து மரிக்கொழுந்தே என்**
**கோமளமே கண்வளர்வாய்...’’**

என தொடங்கும் பாடலைக் கூறலாம்.

ஏர்பூட்டி வேலை செய்யும் விவசாயிகள் தமது தொழிலை முன்னிறுத்தி சில நாட்டார் பாடல்களை பாடியுள்ளனர்.

**‘‘சார் பார்த்த கள்ளனடா – செல்லன்**
**தாய் வார்த்தை கேளேண்டா**
**பாரக்கலப்பையடா செல்லனுக்கு**
**பாரமெத்தத் தோனுதடா....’’**


என தொடங்கும் பாடல் ஏர்பாடலாக எடுத்துக்காட்டப்படுகின்றது.

மேலும் மலையக நாட்டாரிலக்கியத்தின் பாடல் மெட்டைப் கொண்டு எழுத்தாளர்களும் தங்கள் கவிகள், பாடல்களை படைக்கின்றனர். உதாரணம் சி.சிவசேகரம் எழுதிய

**கும்மியடி தோழி கும்மியடி – மலை**

நாடு விழித்தெழ கும்மியடி எனத் தொடங்கும் கவிதையை குறிப்பிடலாம்.

இவ்வாறாக செவிவழியாக வந்து, வாய்வழியாக வளர்ந்து வரும் நாட்



டார் இலக்கயங்கள் பல ஆவணப்படுத்தப்பட்டுருந்தாலும் பல சிதைந்தும் போயுள்ளது. எனவே இப்போது இருக்கின்ற எம்மலையக நாட்டார் இலக்கியத்தை கட்டிக்காக்கவே எழுத்தாளர்கள் தம் பணிகளை ஓர் புறம் நாட்டார் இசையை தழுவி பாடல் கவிகள் எழுதி வர, பாரம்பரிய கலையாகிய மண்ணின் மணம் வீசும் நாட்டார் இலக்கயங்களை உலகுக்குள் எடுத்துசெல்ல, அதனை பேணிக்காக்க இலங்கை அரசாங்கமும் தமது பணிக்கு சில நாட்டார் இலக்கியங்களை கல்வித் துறையில் பாடத்திட்டங்களுக்குள் புகுத்தி வருகிறது. சாதாரண தர, உயர்தர மாணவர்களின் பாடத்திட்டங்களில் மட்டுமன்றி தமிழ்மொழித்தின போட்டிகளின் போதும் நாட்டார் இலக்கியத்தை போட்டி நிகழ்ச்சியாக மாணவர்களுக்கு அறிமுகம் செய்து வருகிறது.

மலையகத்தின் நாட்டார் இலக்கியங்களை மனித சமூகத்தின் சிகரத்தை எட்டிப் பிடித்து அழியா வண்ணமாய் தடம் பதிக்க ஆய்வாளர்களும் தமது கடின உழைப்பை வழங்க வேண்டும். வளர்ந்து விட்ட தாக சொல்லப்படுகின்ற எந்தவொரு சமூகத்திலும் ஓர் நாட்டார் இலக்கியம் அடித்தளமாய் ஓடிக்கொண்டிருக்கும் அதை வற்றாது பாதுகாப்பதன் மூலமே மனிதத்தின் வேரை உயிர்ப்புடன் வைத்திருக்க முடியும்.

---

# நான் கவிஞனும் இல்லை

13 ஆம் பக்கத் தொடர்ச்சி...

மழை போன்றது தமிழ் எனக்கு. தொட்டு முகர்ந்து கட்டியணைத்து முத்தமிட்டால் போதும் முழுவதும் நனைந்து விடுவேன். பெருவோலப் பெயலாயும் நிற்கும். அருவமாய் மண் வாசனையாகவும் தங்கும். புலன்களுக்குள் சிக்கும் புத்தமுதம் தமிழ். உணர்வெனும் கருவிற்கு காரணமும் ஆகிறது. அதனை சரிவர பிரசவிக்கும் வல்லமையையும் தருகிறது. தமிழ் வெறும் மொழியல்ல எனக்கு. அழியா இன்பம் தந்த வாழ்வின் விழி. சின்ன சின்னதாய் சேகரித்த இன்ப நினைவுகளெல்லாம் ஏதோ ஒரு வகையில் தமிழால் வந்தவையே. வாழ்தல் இனிதென வாழும் வழி தந்த தமிழைப் போற்ற என்னிடம் தமிழ் இல்லை. முடிந்தால் மௌனம் மொழி பெயர்க்க கூடும்.

**‘‘தலைமை புலமை செழுமை**
**பழமை தாய்மை சீர்மை பெருமை**
**நீர்மை திண்மை ஒண்மை வண்மை**
**உண்மை தூய்மை நன்மை**
**இறைமை இனிமை இம்மை**
**மறுமை தவமே தமிழே’’**

**(துவி ராக தில்லானா –**
**தமிழ் இலக்கிய மரபு மார்க்கம்)**

---

# ஐந்துநொடி ஒழுக்கம்

24 ஆம் பக்கத் தொடர்ச்சி...

தவிர வேறு வழியில்லை. எழுந்து கொள்ள வேண்டும் என்கின்ற கட்டாயம் உங்கள் மனதில் ஏற்படுகின்றது. அதனால் நீங்கள் மிக வேகமாக உடலில் ஒரு அசைவு ஏற்படுத்துகின்றீர்கள். உடனடியாக உங்களுக்கு ஒரு Motivation கிடைக்கின்றது. அந்த சக்திதான் உங்களை அடுத்த காரியத்தை செய்ய வைக்கின்றது. எதை செய்ய விரும்புகின்றீர்களோ அதை செய்வதற்கான தைரியத்தையும் சக்தியையும் இந்த ஐந்து நொடி ஒழுக்கம் உங்களுக்கு கொடுக்கின்றது. இது உலகத்தில் இருக்கின்ற பலரால் கையாளப்பட்டு, தங்கள் வாழ்க்கையில் வெற்றி அளித்த ஒரு முறையாக பலரும் தங்கள் வெற்றிப் பயணத்தில் பதிவேற்றி வருகின்றார்கள். நீங்களும் உங்களுடைய வாழ்க்கையில் முயற்சி செய்து பாருங்கள். உங்கள் வாழ்க்கையின் வெற்றி பயணத்தில் இந்த ஐந்து நொடி ஒழுக்கம் ஒரு மிகப்பெரிய மைல்கல்லாக இருக்கும்.

---

# குண்டு வெடிப்புக்களும் கைதுகளும் நிறைந்த காலங்களில்
## நிம்மதியாக படிக்க மட்டுமல்ல காதலிக்கவும் முடியவில்லை

15 ஆம் பக்கத் தொடர்ச்சி...

மும்பாயை சுற்றி வந்து காதலிப்பை பார்க்க பார்க்க, நாங்களும் யாழ்ப்பாணத்தில் சைக்கிளில் டபிளிஸ் ஏறி பண்ணை பாலத்தடியை சுற்றி வர வேண்டுமென மனது துடிக்கும்.

குண்டு வெடிப்புக்களும் கைதுகளும் நிறைந்திருந்த காலங்களில் நிம்மதியாக படிக்க மட்டுமல்ல காதலிக்கவும் முடியவில்லை. மீண்டும் அந்த இனிமையான இளமைக் காலங்களிற்கு எங்களையும் அழைத்துச் சென்று காதலிக்கும் பருவத்தை ஞாபகப்படுத்திய பாடலாக ஓகே கண்மணி படத்தில் வரும் மென்டல் மனதில் பாடல் அமைந்தது.

மணிரத்னம் என்றுமே பாடல்களை படமாக்க வெளிநாடுகளுக்கு சென்றதில்லையாம். இயற்கையையும், நடிகர்களின் நடிப்பையும் நடன இயக்குனர்களின் நடன அசைவுகளையும், பாடல் வரிகளையும், இசையையும், நம்பி காட்சிப்படுத்தப்படும் பாடல்களாகவே மணிரத்தினத்தின் திரைப்படப் பாடல்கள் அமைந்து விடுகின்றன.


நாங்கள் விரும்பும் பாடல்கள், நாங்கள் பயணிக்கும் வாழ்வின் கட்டங்களை பொறுத்தோ இல்லை எங்களது ரசனையைப் பொறுத்தோ மாறுபடலாம், வேறுபடலாம். மாறுபாடுகள் இருந்தாலும் வேறுபாடுகள் வந்தாலும், பாட்டுக்களோடு பயணிக்கும் வாழ்க்கையில் இருக்கும் சுகம் விபரிக்க இயலாதது. நல்ல பழைய நினைவுகளை மீட்க வைக்கும் அருமையான பாடல்கள் வாழ்கையை வளமாக்குபவை, அதிலும் மணிரத்தினத்தின் படப் பாடல்கள் என்றால் அது ஒரு தனிரகம்.








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# உடல், உள்ளம் சார்ந்த கிராமிய விளையாட்டுகள்

கிராமிய வாழ்வியலில் மிக முக்கிய பங்காக விளையாட்டுகள் காணப்படுகின்றன. உடல் மற்றும் உள்ளம் சார்ந்து தம்மை துடிப்பாக வைத்துக் கொள்கிற பண்பையும் தமக்கிடையே ஒற்றுமையுணர்வை மேம்படுத்தும் திறனையும் மக்கள் விளையாட்டுகளினூடாக வளர்த்துக் கொண்டார்கள். ஒவ்வொரு கிராமமும் தத்தம் பண்பாடுகளின் தன்மைக்கேற்ப விளையாட்டுக்களை கொண்டிருக்கின்றன. விளையாட்டுக்கள் இவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது.

அக விளையாட்டுக்கள் – புற விளையாட்டுக்கள். அதே போன்று – பாடலுடன் விளையாடுவது– பாடலற்று விளையாடுவது என்றும் வகைப்படுத்தப்படுகிறது. ஆண் பெண் என்ற வேறுபாட்டின் அடிப்படையிலும், வயது அடிப்படையிலும் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது. சிறுவர் விளையாட்டு, சிறுமியர் விளையாட்டு, சிறுவர் மற்றும் சிறுமியர் விளையாட்டு, ஆடவர் விளையாட்டு, முதியோர் விளையாட்டு.

சிறுவர் விளையாட்டுக்கள் உடல் வலிமை, அக மகிழ்வு, ஒற்றுமைப் பண்பு ஆகியற்றை கொடுக்கும் பண்புடையதாக காணப்படுகின்றன. மென்மையான விளையாட்டுக்களையே சிறுமியர் விரும்பி ஆடுவர். ஆடவர் விளையாட்டுகள் அறிவு சார்ந்ததாகவும முதியோர் விளையாட்டுகள் மன நிம்மதி கொடுப்பனவாகவும் காணப்படுகின்றன.

சிறுவர் சிறுமியர் விளையாட்டுக்களாக கெந்தல்கோடு, புளியடி, புளியடி எவடம் எவடம், கயிறடித்தல், காத்தாடி, கும்மியடித்தல், ஒத்தையா இரட்டையா, ஓரம்மா கடைக்கு போனா, நுள்ளு பிராண்டி கிள்ளு பிராண்டி, நண்டூருது நரியூருது,



எலியும் பூனையும், குலை குலையாய் முந்திரிக்காய் நரிய நரிய சுத்தி வா, ஒளிச்சு பிடிச்சு, பம்பரம், உருளைக்கிழங்கு பிரட்டல், வட்டக்கோடு, கொக்கான் வெட்டுதல், பனங்காய் வண்டியுருட்டுதல் என பல காணப்படுகின்றன.

சிறுமியர் விளையாடும் போது பெரும்பாலும் பாடல் இசைத்தபடியே விளையாடுவர்.பாடல்கள் வேடிக்கையாகவும் வினாவிடையாகவும் அமைந்திருக்கும்.உதாரணமாக கிட்டியடித்தலின் போது இறுதியாக மூச்சு விடாது பின்வரும் பாடலை பாடியபடி விளையாடிய இடத்திற்கு ஓடுவார்கள்.

**‘‘ஆலையிலே சோலையிலே**
**ஆலங்காடிச் சந்தையிலே**
**கிட்டிப் புள்ளும்**
**கிறுகியடிக்கப் பாலாறு.....பாலாறு**
**ஆலச் சருகு மடமடக்க**
**அங்கொரு பன்றி வெருண்டோட**
**கோரைக் கிழங்கு கொத்தியரிக்கக்**
**கொம்பேறி மூர்க்கன் குறுக்கால் ஓட**
**ஆத்துக் கட்டு அலம்பலக் கட்டு**
**அவிட்டுக் கட்டு இறுக்கிக் கட்டு’’**

எனத் தொடரும். இவ்வாறு சிறுவர்கள் விளையாடுவதனூடாக இயல்பாகவே மனப்பாடம், கிரகித்தல் மற்றும் தலைமைத்துவப் பண்புகளை பெற்றுக் கொள்கிறார்கள்.

ஆடவர்கள் விளையாடும் விளையாட்டுகளாக மாட்டுவண்டில் சவாரி, கயிறுழுத்தல், தலையணைச் சண்டை, சறுக்குமரம் ஏறுதல், கபடி, எனப் பல காணப்படுகின்றன. உடல்வலிமையை பறைசாற்றும் முகமாகவும் அவர்களின் விளையாட்டுகள் காணப்படுகின்றன. முதியோர் விளையாட்டுகளாக ஏணியும் பாம்பும், தாயம், கடதாசி விளையாட்டு ஆகியவற்றை குறிப்பிடலாம். அவர்களிடையே மனரீதியான பலத்தையும் ஒற்றுமையையும் இவ் விளையாட்டுகள் ஏற்படுத்துகின்றன.

கிராமிய மக்களின் அன்றாட வாழ்வியலையும் தொழிலையும் அடிப்படையாகக் கொண்டு விளையாட்டுக்கள் அமைந்திருப்பதைக் காணமுடியும். உதாரணமாக கிளித்தட்டு அல்லது தாச்சி என்று அழைக்கப்படும் விளையாட்டானது வேளாண்மை செய்தலை கருவாக கொண்டது. கிளித்தட்டு ஆரம்பமானதும் கிளி எனப்படுபவர் வயலின் சொந்தக்காரராகவும் கிளித்தட்டு கோடுகள் வரம்புகளாகவும் அக்கோடுகளில் காவல் காப்பவர்கள் காவலர்களாவர்.வயலின் சொந்தக்காரர் கிளிகளை வயலில் விடாது வரம்புகளில் ஓடித் திரிந்து கிளிகளை துரத்துவார்.எதிர் அணியினர்தான் கிளிகள். மேலும் இவ் விளையாட்டு பண்டிகைக் காலங்களில் பெரிதும் விரும்பி விளையாடப்படும் விளையாட்டாக காணப்படுகிறது.

தற்காப்பு தொடர்பான விளையாட்டுகளாக வாள்வீச்சு,சிலம்படி,தீப்பந்தம் சுழற்றல்,மற்போர் என பல காணப்படுகின்றன.விளையாட்டோடு சேர்த்து எதிரி தாக்க வருகையில் எதிர்த்து நிற்க கற்கின்ற கலையாகவும் உருமாறுகின்றன இவ் விளையாட்டுகள். அவை கிராமிய மக்களிடையே மெல்ல மெல்ல மருவி வருவதை காணமுடிகிறது.முன்பள்ளிகளிலும் கற்றல் செயற்பாடுகளில் இவ் விளையாட்டுகள் இல்லாது போவதை குழந்தைகளின்



பிரியதர்ஜினி பாலசுப்ரமணியம்
மறவன்குளம்,
வவுனியா, இலங்கை

28 ஆம் பக்கம் பார்க்க...






# காலத்தின் கருணை



பறவைக் கூட்டங்கள்
எப்போதும் அழகுதான்!
பார்வைகளின் வேற்றுமைகள்
அவற்றைச் சீண்டாதவரை!
வேடர்களின் கைகளில்
புலாலாகி மரிக்காதவரை!
கூண்டுப் பறவையாகிச்
சுயம் இழக்காதவரை!
சூழ்ச்சிகளின் பின்னால்
சுதந்திரம் தொலைக்காதவரை!
பறக்கத் துடித்தவற்றின்
சிறகுகள்
தீக்கிரையாக்கப்படாதவரை!

பிறர் வலிகளைக் கொண்டாடும்
வஞ்சக உலகில்
சிறகுகள் கருகிய பின்னும்
சிரித்தபடி பறப்பது
அத்தனை சுலபமில்லை!
கருகிய சிறகுகளையும்
வெட்டியெறிந்துவிட்டுச்
சிரிக்கச் சொல்வது -இங்கே
தன்னம்பிக்கையளித்தல்
என்பதாகின்றது!

எல்லாவற்றையும் தாண்டிப்
பறத்தலும் இங்கு
ஏளனப் பார்வைகளாகி
எரிந்த சிறகுகளைப்
பிடுங்கியெறிந்துவிட்டுப் பின்
அன்பெனும் பெயரோடு
தடவிக்கொடுக்கப்படுகிறது!

கரு(க்)கிய சிறகுகளும்
வெட்டப்பட்ட சிறகுகளும்
வேதனை கடந்தே
வந்ததெனப் புரிய
முடியாதவர்க்குப்
பறத்தலின் பிழையெனச்
சாட்டை வீசுதல்
சாதரணமானதுதான்!

கால்களின் துணைகொண்டு
நடக்கச் சொல்லிவிட்டுப்
பாதைகள் தோறும்
கொடுமுட்களைப் பரப்பிச்
சிரித்துக்கொள்வதும்
இங்கே புதிதில்லைதான்!

பறப்பதே பறவையென்ற
அடையாளம் இழந்தும்
நடப்பதே நம்பிக்கையெனத்
துணிந்து முயல்கையில்
தூக்கி வீசிவிட்டுச்
சிரித்துக் கொல்லும்
இரக்கமற்ற மனிதர்களை
எப்போதுமே சகித்துக்
கொள்ள வேண்டியே
காலம் கட்டளையிடுகிறது!

சகித்துச் சகித்தே அவற்றின்
காலம் முடியக்கூடும்!
அன்றேல்
கருகிய சிறகுகளோடும்
பறந்தெழும் ஆற்றல்
பரவக்கூடும்!
மீண்டும் மீண்டும் அவை
மீளாத் துயரில்
தள்ளப்படாதிருத்தலே
அவை வேண்டும்
காலத்தின் கருணையாகும்! ■



பொலிகையூர் ரேகா
(தமிழ்நாடு)

# யேர்மனியில் தேர் திருவீதி உலா!











யேர்மனி டோட்மூண்ட் சாந்தநாயகி சமேத சந்திரமௌலீசர் ஆலயத் தேர் திருவிழா 18.07.2021 மிகவும் சிறப்பாக நடைபெற்றது. திருவிழாக் காட்சிகள் சில.

# உடல், உள்ளம் சார்ந்த கிராமிய விளையாட்டுகள்

27 ஆம் பக்கத் தொடர்ச்சி...

செயற்பாடுகளில் உணரமுடிகிறது.அவர்களின் கற்றலை இலகுவாக்குவதற்கு பதிலாக சுமையாக மாற்றிக் கொண்டிருக்கிறோம்.பிள்ளைகளின் தசைநார் விருத்திக்கும் துடிப்பான செயற்பாடுகளுக்கும் கிராமிய விளையாட்டுகள் முக்கிய பங்காக அமைகின்றன. இக் கிராமிய விளையாட்டுகளை முன்பள்ளி ஆசிரியர்கள் அறிந்திருத்தல் அவசியமானதொன்றாகும். நாட்டுப்புற பண்பாட்டிலிருந்து நகர்ப்புற பண்பாட்டிற்கு மக்கள் மாறி வருவதனால் நாட்டுப்புற பண்பாடுகள் கலைகள் மற்றும் விளையாட்டுகள் மருவிக் கொண்டு வருகிறது.

மேலைத்தேய விளையாட்டுகளான கிரிக்கெட், கால்பந்து, மேசைப்பந்தாட்டம்,கொக்கி, பட்மின்ரன், டாம், எனப்பல விளையாட் டுகள் உள்நுழைந்து வளர்ந்து வருகின்றன. இதனால் தலைமுறை தலைமுறையாக விளையாடப்பட்ட விளையாட்டுகள் மீதான நாட்டம் குறைந்து கொண்டே போகிறது. இவ்வாறு மருவும் நம் பண்பாடுகளை மீண்டும் உயிர்ப்பிக்க வைக்க வேண்டும். அவற்றின் நன்மைகள் பற்றி இன்றைய தலைமுறைக்கு எடுத்துக் கூற வேண்டும். இது எல்லோரதும் கடமையாகும்.


**''மாலை முழுதும் விளையாட்டு என்று வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா''**

உசாத்துணை. 1.இலங்கை கிராமிய விளையாட்டுகள் –கேணிப்பித்தன் ச.அருளானந்தம் 2.தமிழர் கிராமிய விளையாட்டுக் கலை மரபு– சு.குணேஸ்வரன் ■







# அடித்தட்டு மலையாள படத்தில் ஆழ்கடல் மீனவனாக ஆடுகளம் ஜெயபாலன்



படப்பிடிப்பு பற்றி கூறுகையில். 16 நாட்கள் கொல்லம் கடலை மேடையாக்கி ஆடிவிட்டு வந்திருக்கிறேன். பேசும் கண்கள் என என் உடல் மொழியை வியந்து தமிழரும் மலையாளிகளும் தாய் பிள்ளைகள் தானே என நல்வார்த்தைகூறி நீங்கள் தமிழிலேயே பேசி நடியுங்கள் என என் அடையாளத்தை கவுரவப் படுத்திய மலையாள இயக்குகுனர் ஜிஜோ மற்றும் சுவடி எழுத்தாளர் கைஸ் இருவருக்கும் நன்றிகள். ஆடுகளம் கண்ட நம்மவர் தற்போது ஆழ்கடல் காண்கிறார். வெற்றிபெற வெற்றிமணி வாழ்த்துகின்றது.



## அவசரப்பட்டு விட்டேன்; ரேவதி

நான் 17 வயதில் சினிமாவுக்கு வந்தேன். 20 வயதில் திருமணம் செய்து கொண்டேன். அப்படி அவசரப்பட்டு செய்திருக்கக்கூடாது என்று பின்னால் வருத்தப்பட்டேன். புன்னகை மன்னன் படம் வந்த நேரம் அது. இன்னும் சில நல்ல படங்களில் நடித்துவிட்டு திருமணம் செய்திருக்கலாம் என்று அப்புறம் உணர்ந்தேன்... என்கிறார் ரேவதி.அவர் மேலும் கூறும்போது, நான் நடிப்பதற்கு கொஞ்சம் பதற்றப்பட்டது சிவாஜியுடன் லட்சுமி வந்தாச்சு படத்தில்தான். அது ஒரு பாடல் காட்சி. அவர் கால்களை தொட்டு வணங்குவது போல் காட்சி. சிவாஜியுடன் நடிப்பதற்கு பதற்றப்பட்டது உண்மை... என்றார்.' உங்களுக்கு இன்ப அதிர்ச்சி அளித்த சக போட்டியாளர் யார்? என்ற கேள்விக்கு, 'பூர்ணிமா பாக்யராஜ். அது செல்போன் வராத காலம். பூர்ணிமாவிடம் இருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. என் நடிப்பை பாராட்டி அவர் எழுதிய ஒவ்வொரு வார்த்தையையும் மறக்க முடியாது என்று ரேவதி கூறினார். [ரேவதி, பூர்ணிமா, ஊர்வசி, ஷோபனா ஆகிய 4 பேரும் ஒரே சமயத்தில் திரையுலகுக்கு வந்தவர்கள்]

## திரௌபதியாகும் தீபிகா படுகோனே



2 வருடங்களுக்கு முன்பே மகாபாரதம் கதையை படமாக்கும் அறிவிப்பு வந்தது. ஆனால் அதன்பிறகு எந்த முன்னேற்றமும் இல்லாததால் படத்தை கைவிட்டுவிட்டதாக பேச்சு கிளம்பியது. இதற்கிடையே இந்த படத்தை தயாரிக்கும் மது மந்தனா தற்போது அளித்துள்ள பேட்டியில், மகாபாரதம் கதையை படமாக்கும் நேரம் வந்து விட்டது. இந்த படத்தின் கதை தீபிகா படுகோனேவுக்கு பிடித்துபோனதால் திரௌபதியாக நடிக்க முன்வந்துள்ளார். புராணங்களை படமாக்கும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதனால் கடும் முயற்சிகள் எடுத்து எல்லா தகவல்களையும் சேகரித்தோம். இப்போது மகாபாரதம் கதையை படமாக்கும் அனைத்து தகவல்களும் எங்களிடம் இருக்கிறது. இந்த படத்தை எடுக்க கொஞ்சகாலம் ஆகும். அதற்குள் ராமாயணத்தை படமாக்கும் வேலையை தொடங்க இருக்கிறோம் என்றார்.

## ஷங்கர்- கமல் செய்வது நியாயமா? லைக்கா என்ன செய்யப்போகிறது

தமிழ் சினிமாவில் கடந்த சில நாட்களாகவே பரபரப்பாக இருக்கும் விஷயங்களில் இந்தியன் 2 பட விவகாரமும் ஒன்று. இந்தியன் 2 படத்தின் கதாநாயகனாக கமல்ஹாசன், அடுத்து லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் நடிக்க உள்ள விக்ரம் படத்தின் வேலைகளை ஆரம்பித்து விட்டார். இந்தியன் 2 படத்திற்காக இதுவரையில் 200 கோடி ரூபாவுக்கு மேல் செலவு செய்திருக்கிறது தயாரிப்பு நிறுவனமான லைகா. படத்தின் இயக்குநர் ஷங்கர் மற்றும் படத்தின் நாயகன் கமல்ஹாசன். இப்படி இரண்டு பெரும் கலைஞர்கள் தாங்கள் பங்கேற்றுள்ள படத்தை அப்படியே அம்போவென விட்டுவிட்டு அவர்களது அடுத்த படத்திற்குப் போவது எந்த விதத்தில் நியாயம்?

## விருமாண்டியான 'விக்ரம்'





நடிகர் கமலின் 232ஆவது படம் விக்ரம். லோகேஷ் கனகராஜ் இயக்கும் இப்படத்தை கமலின் சொந்த தயாரிப்பு நிறுவனமான ராஜ்கமல் பிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. இப்படத்தில் விஜய் சேதுபதி, பகத் பாசில், நரேன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்கள்.விக்ரம் படத்தின் முதல் பார்வை போஸ்டர் வெளியானது. கமல், விஜய் சேதுபதி, பகத் பாசில் ஆகியோர் அடங்கிய இந்த முதல் பார்வை போஸ்டர் ரசிகர்களை கவர்ந்து சமூக வலைத்தளத்தில் வைரலானது.அதே சமயம் கமல், நெப்போலியன், பசுபதி நடிப்பில் வெளியான விருமாண்டி படத்தின் போஸ்டர் போல் இருப்பதாக சமூக வலைத்தளத்தில் கருத்து தெரிவித்து வருகிறார்கள்.


## மட்டக்களப்பு- நாவற்குடா அனோரியா ஆங்கில அக்கடமி

**அன்பான புலம்பெயர்ந்து வாழும் நல் உள்ளங்களே!**

கொரோனாவை விட மிகவும் கொடுமையான அனுபவங்களை அனுபவித்து தான் நீங்கள் இன்று கடல் கடந்து வேலை செய்கின்றீர்கள். அதனை நாம் உணர்வோம். தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் நாவற்குடா எனும் கிராமத்தில் அனோரியா ஆங்கில அக்கடமி எனும் தனியார் கல்வி நிலையத்தை ஆரம்பித்து மாணவர்களின் ஆங்கில அறிவோடு கணிதம் விஞ்ஞானம் போன்ற பாடங்களையும் கற்பித்து வருகின்றோம்.

எமது அக்கடமியை அரச சட்டத்தின் படி பதிவு செய்துள்ளோம். REG.NO.DS/MN/C/BR/173/13 இங்கு கற்கும் மாணவர்கள் எண்ணிக்கை 95. தரம் 01 தொடக்கம் உயர்தரம் வரை கற்கின்றார்கள். இதில் தாய் தந்தையை இழந்த பிள்ளைகளுக்கு இலவசமாக கற்பித்தல் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இயற்கை அனர்தங்களின் போது இக்கால கட்டங்களில் விதவைகள் ஆதரவற்ற முதியோர் தாய் தகப்பனை இழந்த பிள்ளைகளுக்கான கல்வி சம்பந்தமான உதவிகள் மற்றும் இடர்கால கொடுப்பனவுகள் இவற்றை நல்ல உள்ளம் படைத்தவர்கள் மற்றும் எமது உறுப்பினர்களின் சந்தா பணத்தின் ஊடாக செய்து வருகின்றோம். மாதம் ஒன்றிற்கு எமக்கு குறைந்தது ரூபா 5 இலட்சம் பணம் தேவைப்படுகின்றது இதில் 2 இலட்சம் எமது அமைப்பினரின் மூலம் தேடிக் கொண்டாலும் மிகுதிப் பணம் மிகவும் சிரமமாகவே இருக்கின்றது. இதற்காக தங்களின் தாராள உள்ளத்தை எதிர்பார்கிறோம்.

நன்றியோடு



கு.குமரேசன் எமது அமைப்பின் கணக்கு இலக்கம்.

HDFC BANK. ANORIYA ENGLISH ACADEMY.
802100007397

Deutsche Bank

# Willkommen in Ihrer Filiale Duisburg.



Janagran Mahendran
Berater Private Banking

Als Kunde erwarten Sie heute nicht nur erstklassige Finanzlösungen, sondern eine faire und verständliche Beratung. Wir wollen Ihren Ansprüchen gerecht werden – und haben uns zum Ziel gesetzt, Sie als verlässlicher und leistungsstarker Partner auf Ihrem privaten und geschäftlichen Weg zu begleiten. Dafür verbinden wir die Reichweite, Erfahrung und Leistungsstärke eines global führenden Finanzdienstleisters mit der Zuverlässigkeit und Kundennähe einer Hausbank. Sprechen Sie jetzt mit uns.

Filiale Duisburg
Königstraße 7–11, 47051 Duisburg
Telefon (0203) 9922-521
janagran.mahendran@db.com


Deutsche Bank
Mehr Wünsche erfüllen.
Möglich mit dem PrivatKredit, der Ihnen finanziellen Spielraum gibt.
#PositiverBeitrag
Jetzt mit 1,75 % effektivem Jahreszins.*
Nettodarlehensbetrag 1.000 EUR
Effektiver Jahreszins* 1,75 %
Fester Sollzinssatz p. a. 1,74 %
Monatliche Rate 84,12 EUR
Laufzeit in Monaten/Anzahl Raten 12
Zu zahlender Gesamtbetrag 1.009,43 EUR
Das Angebot entspricht dem repräsentativen Beispiel gemäß § 6a Absatz 4 PAngV.
*Gilt für einen Kreditbetrag von 1.000 bis 50.000 Euro bei 12 Monatsraten (gilt nur für Kunden ohne bestehenden Deutsche Bank PrivatKredit). Diese Kondition erhalten mindestens 2/3 der Kunden bei Abschluss eines Deutsche Bank PrivatKredits. Laufzeit in Abhängigkeit vom Ratenzahlungsbeginn: 12 bis 16 Monate. Das Angebot ist gültig bis 31. März 2021. Bonität vorausgesetzt.
Darlehensgeber: Deutsche Bank AG, Theodor-Heuss-Allee 72, 60486 Frankfurt am Main


EurAsian-Tour
VALUTRANS MONEY TRANSFER
EurAsian-Tour Further Str.146 41462 Neuss
Rishi Ganeshamoorthy | Rishi 0174 96 44 965
Tel:02131 7387 83 Fax:02131 73 87 84 | info@eurasian-tours.com


Jasmine Silk House
அனைத்து சேலைகளும் வகை
வகையாக வாங்க வாருங்கள்
என்றும் சிறப்பு விலை
தொடர்பு இலக்கம்: 01731937325
ஆடைகளின் ராணி
Tel: 02102 844744
HP: 0173 1937 325
"Jasmine Silk House"
Fester Str.50- 40882 Ratingen


Asia Bazar
துரித பணமாற்றுச்சேவை
ஆசிய, ஆபிரிக்க உணவு வகைகள்
வியாழன், சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள் கடல் உணவுப்
பொருட்கள் இன்னும் பல...
Ria Money Transfer
VALUTRANS MONEY TRANSFER
MoneyGram
உரிமையாளர்: பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4 41061 Mönchengladbach
Tel: 02161 208303 | Fax: 02161-309282


PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
Ludwig str.87a
70197
Stuttgart
சிறப்பு
விலையில்
அழகிய
சேலைகள்
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிற்ரேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
SALE
Stuttgart
Tel: 0711 615 8976/ 0170 334 4059


Shakthy Foundation
துவாரகமாய் முதியோர் இல்லம்
SHAKTHY FOUNDATION
தொடர்புகளுக்கு:-
Dwarakamal Senioren WG
Alpenroder Str.59 65936 Frankfurt am Main, Germany
Tel: 0152-14069504 Mrs.Nava (Resha)
சீரடி பாபாவின் அருளால் ஜேர்மனி பிராங்க்பர்ட் நகரில் 01.10.2020 ஆம் திகதி துவாரகமாய் முதியோர் இல்லம் உருவாகியுள்ளது. எமது அன்பார்ந்த சகோதர சகோதரிகளே உங்களுக்கு ஓர் நற்செய்தி. உங்கள் பெற்றோரை உங்களைப் போலவே அன்பாக அரவணைத்து பராமரிப்போம் கவலையை விடுங்கள் பிராங்க்பர்ட் நகரில் 01.10.2020 ஆம் தகதி முதல் துவாரகமாய் முதியோர் இல்லம் அமைந்துள்ளது. இங்கு தமிழில் உரையாடி நமது தமிழ் உணவுடன் முதியவர்கள் பராமரிக்கப்படுகின்றார்கள். இதற்கு அருகாமையில் அழகான பூங்கா மற்றும் ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயம் மற்றும் சித்தி விநாயகர் ஆலயம் அமைந்தள்ளது. இல்லத்தினால் பெறும் வருமானங்கள் 28.03.2018 திரு. திருமதி. நவநீதன் றிஷாந்தியாவினால் இலங்கையில் உருவாக்கப்பட்ட மாணவர் விடுதிக்கு செலவு செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இவ்விடுதியில் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள பல மாணவர்கள் கல்வி கற்று வருகின்றார்கள்.
Shakthy Foundation T/M/Chennaiyoor, Central College, Mutur, Trincomale, Srilanka. | S.Rajathurai: +94 77 338 4637
Shakthy
Foundation
Acc No:
173020027815
HATTON
NATIONAL BANK
Trincomale,
Srilanka


SARAVANAA BHAVAN
புதிய இடத்தில்!! புதிய பொலிவுடன்!!
HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
069-97 693 374
info@saravanaabhavan.de
kaiserstraße 68, 60329 Frankfurt am Main
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K France Germany Australia South Africa Canada U.S.A


STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
StaR Impex : Inh : K.Sivasubramaniam
Tel: 0231 860 26 96
AGAM
அ.க.ம
Nila
Double Horse
Aachi
BTM
Rabeena
Franziusstrasse 150 (TOR3) DE -44147 Dortmund
Tel: 0231/8602696| Fax: 0231/8602698